இரு மாத இதழ்

விலை 20/-



# நிமிர்ந்து நிற்கும் நினைவுகளில்

පඩිහල් PADIHAL

# படிகள் 8

ASWA

அநுராதபுரம்
நட்சத்திர நற்பணி மன்ற
வெளியீடு

அநுராதபுர நகரில் இப்பொழுது

பாடசாலை மாணவர்களுட்பட அனைவருக்குமான தமிழ் சிங்கள ஆங்கில புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்களுக்கு வசதி செய்துள்ளது .

# வெலிகம புத்தக நிலையம்

மேலும் எம்மிடம்

இஸ்லாமிய புத்தகங்கள் குர்ஆன்கள் மற்றும் ஸ்டேசனரிஸ் (Stationeties) ஆகிய வற்றுடன் தொலைபேசி அழைப்புகள்

பொட்டோ கொப்பி (Photo Copy)

ஆகிய வற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.





(இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு முன்னால்)

வங்கி வீதீ அநுராதபுரம்.

தொ.இல. 025 4581469

025 2234472

நல்லன காணவும்
நல்லவற்றோடு இணையவும்
முயல்பவர்களின் தொகை
சிறியதாக இருக்கலாம்
இருப்பினும்
முயற்சியின்மையிலும் பார்க்க
அது மேலானது.

**- அட்டைப்படம் -**

படிகள் 08 அட்டையை
அலங்கரிப்பவர் இலக்கிய வித்தகர்
சைவப்புலவர்
திரு. அநு. வை. நாகராஜன்
அவர்கள். இவர் அநுராதபுரத்தில்
கல்வி கலை இலக்கிய நற்பணி
ஆகிய துறைகளில்
செயற்பட்டுள்ளார். இதற்கமைய
மாணவர்கள் ஆசிரியர்கள்
புத்திஜீவிகள் இலக்கிய
ஆர்வலர்கள் சார்பாக படிகள்
வாழ்த்தி மகிழ்கிறது.

படைப்பாளிகளிடமிருந்து
கவிதைகளை மட்டுமின்றி
சிறுகதைகள் அறிவியல்
கட்டுரைகள் மற்றும்
ஆக்கபூர்வமான
விமரிசனங்களையும்
எதிர்பார்க்கிறோம்.


# படிகள்

கலை இலக்கிய அறிவியல் இதழ்

ஆகஸ்ட்-செப்டெம்பர்-2005

**இருமாத இதழ்**

**-வெளியீடு-**

அநுராதபுரம்
நட்சத்திர நற்பணி மன்றம்
**ASWA**

தனிப்பிரதி 20.00
தபால்மூலம் 25.00
வருட சந்தா 120.00

காசுக்கட்டளை அனுப்புவோர்
பின்வரும் முகவரிக்கு
அனுப்பவும்.



**S.M.FARIS,**
**864, FREEMAN MW,**
**ANURADHAPURA.**

சகல தொடர்புகளுக்கும்...

THE EDITOR
PADIHAL
78B, JAYANTHI MW,
ANURADHAPURA.
TEL-025-2225300

## உங்கள் பார்வைக்கு எங்கள் கருத்து.. ..

அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்றம் அதன் நகர்வில் மூன்றாவது ஆண்டை நோக்கி தடம் பதிக்கிறது. கடந்த ஈராண்டுக்குள் படிகள் இதழ் உட்பட எமது இதர செயற்பாடுகளுக்கு பல்வேறு வழிகளிலும் பலர் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவரது செயற்பாட்டை இன்றும் என்றும் நினைத்துப் பார்த்து நன்றிகளை சமர்ப்பிக்கிறோம்.

படிகள் 07க்கு விமர்சனம் எழுதி எம்மை வலுப்படுத்திய சுவை நெஞ்சங்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் இவ்வாறான விமர்சனங்களை எழுதி அனுப்புமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

படிகள் இதழில் குறித்த சிலரது ஆக்கங்கள் மட்டுமே தொடர்ந்தும் இடம் பெறுவதாக சில கருத்துக்கள் உலவி வருகின்றன. இது உண்மையும் கூட. இருப்பினும் இதழை நாம் யாருக்காகவும் தனித்து வெளியிடவில்லை. ஆரம்பகாலங்களில் பலரது இருப்பிடங்களுக்கு சென்றே ஆக்கங்களை பெற்றுப் பிரசுரித்தோம். இருந்தும் சிலர் இதனை மறுதலித்துள்ளனர்.

எமது முகவரி யாருக்காகவும், மூடப்பட்டோ யாருக்காகவும் திறக்கப்பட்டோ இல்லை. விரும்பிய நெஞ்சங்கள் எம்மோடு தொடர்புகளை வலுப்படுத்தலாம். அநுராதபுர இலக்கிய வளர்ச்சிக்கு உணர்வு பூர்வமாக ஒத்துழைக்க விரும்பும் எவரும் எமது நகர்வுகளில் பங்கெடுக்கலாம். உங்கள் ஒத்துழைப்பு நீடிக்கும் நாள் வரை எமது முயற்சி எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கும். முடியுமான அளவு தொடர்புகளை வலுப்படுத்துவோம். எம்மால் மென் மேலும் சாதிக்கலாம். அத்துடன் படிகள் இதழை இலவசமாக பெறாது சந்தா செலுத்தி பெற முயற்சியுங்கள். இலவசமாக பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது எதிர்கால செயற்றிட்டங்கள் பாதிக்கப்படுகின்றன என்பதை கருத்திற் கொள்ளவும்.

-ஆசிரியர்-


# படிகள்

இருமாத இதழ்

— ஆசிரியர் —

ஏ.எஸ்.ஷர்மிலா பேகம்

— சஞ்சிகைக்குழு —

எம்.சீ.நஜிமுதீன்
ஜே.எம்.எப்.சமான்
எல்.வஸீம் அக்ரம்
எஸ்.எம்.பாரீஸ்
எஸ்.ஏ.சதாத்
எம்.சஹ்ரீன் அஹமட்

— வெளியீட்டுக்குழு —

எம்.ஐ.எம்.பீர்னாஸ்
எஸ்.ஏ.எப்.பர்வீன்
யூ.எம்.ஹிமாஸ்
எம்.எம்.எம்.அர்சாட்
எம்.ஜே.எம்.றிஸாதி
எம்.ஆர்.எம்.பெரோஸ்

இவ்விதழ் 78பீ ஜயந்தி மாவத்தை அநுராதபுரம் எனும் முகவரியில் வைத்து இதழாசிரியரால் வெளியிடப்பட்டது.

வடிவமைப்பு:
எம்.ஏ.எம்.டில்ஷான்

# வேர்களில் விழும் வெளிச்சம்

-நாச்சியாதீவு பர்வீன்.

தேடல் இலக்கியத்தின் முதுகெலும்பு போன்றது. இடைவிடாத முயற்சியும் தேடலும் நமக்கான ஆய்வுகளுக்குரிய தொடக்கப் புள்ளியை தொட்டுக் காட்டும் மெய்ப்பாடுகளாகும். ஒரு சமூகத்தின் கலாச்சார பாரம்பரிய தனிமனித வாழ்வியலோடு மிகுதியாய் பிணைந்தே செல்கிறது. இவ்வாறே ஒரு தனி மனிதனுடைய இலக்கிய ரீதியிலான அறுவடைகளும் நகர்வுகளும் அவனது வாழ்வில் திரும்பும் திசைகள் தோறும் பிரதிபலிக்கும். இந்த வகையில் அநுராதபும் இளம் இலக்கியவாதிகளுக்கு பரிச்சியமற்ற ஆனால் அநுராதபுரத்திலிருந்து 1950 களின் பிற்பாடுகளில் மிகக்காத்திரமான இலக்கிய நகர்வுகளை மேற்கொண்டு இன்று மட்டுக்கும் தனது எழுத்துப் பணியை தொடரும் அநு.வை.நாகராஜன் அவர்கள் கவனிக்கப்பட வேண்டியவர்.

அநு.வை.நாகராஜன் பற்றிய முதலாவது அவதானம் அவரது கருத்தும் எழுத்தும் எனும் கட்டுரைத் தொகுதியை வாசித்ததன் பிற்பாடுதான் எழுந்தது. கருத்தும் எழுத்தும் கட்டுரைத் தொகுதியில் 'நாணலை வருடும் அலைகள்' எனும் தலைப்பில் தனதான இலக்கிய நகர்வுகள் பற்றியும் அநுராதபுரத்தில் தான் வாழ்ந்த காலத்தான இலக்கிய ஓட்டம் பற்றியும் மிகச் சுருக்கமாக எழுதியிருந்தார். இலக்கியம் காலப் பதிவாகும் எனும் மரபு நிலையிலிருந்து நோக்கும் போது இன்றைகளை விடவும் அன்றுகளில் இலக்கிய ரீதியிலான முன்னெடுப்புகள் மிக ஆரோக்கியமானதாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிகிறது.

விஜய் சிறுவர்களுக்கான தமிழ் பத்திரிகையில் தொடர்ந்தும் 'அறிவியல் கலசம்' எனும் பகுதியை தொகுத்து வழங்குவதும், மல்லிகை இலக்கிய சஞ்சிகையில் அவ்வப்போதான ஆக்கங்களை உலவ விடுவதையும், புதுக்கவிதை முன்னோடி அன்பு ஜவஹர்ஷா அவர்கள் அநு.வை.நாகராஜன் பற்றி சொன்ன பல குறிப்புகளும், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அதனது வைர விழா நிகழ்வில் இவர் கலந்து சிறப்பித்தமையும், அநு.வை மீதான மதிப்பையும், ஆழமான பார்வையும் விதைத்தது எனலாம்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, உடுப்பிட்டி பிரதேசத்தில் 25.05.1933 இல் பிறந்தாலும் அநு.வை.நாகராஜன் அவர்கள் தனது இளமைப் பருவத்திலிருந்தே அநுராதபுர பிரதேசத்திலே வாழ்ந்து வந்திருக்கிறார். ஆரம்பம் தொடக்கம் 1984கள் மட்டுமான தனது வசிப்பிடமாக அநுராதபுரத்தை ஆக்கிக் கொண்டதன் காரணத்தினாலோ என்னவோ வைரமுத்து நாகராஜன் எனும் தனது இயற்பெயரோடு அநு. எனும் காரணப் பெயரையும் இணைத்துக் கொண்டார்.

தீவிர வாசிப்பும், தீராத தேடலும், மனித நேயமும், கொண்ட அநு.வை.நாகராஜன் அவர்கள் தனதான இலக்கியப் பயணத்தில் கொஞ்சமேனும் சலிப்போ வெறுப்போ இல்லாமல் ஊற்றெடுத்து ஓடும் நதியாக நடைபயின்று கொண்டிருக்கிறார்.

இவரது தந்தை திரு.நாகமுத்து வைரமுத்து நீண்ட காலமாக அநுராதபுர பிரதேசத்தில் நிலக்கிழாராக, விவசாயியாக இருந்திருக்கிறார். அத்தோடு அநுராதபுரத்து பாடசாலைகள் அன்றுகளில் பிரசித்தி பெற்று விளங்கியமையாலும் தனது ஆரம்பக் கல்வியை அ/புனித திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தமிழ் மொழி மூலம் தொடங்கியவர். இடைநிலைக் கல்வியை அ/புனித வளவனார் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் மேற்கொண்டார்.

இதன் பின்னான பட்டப் படிப்புகளை இலங்கை,இந்தியா, இலண்டன் ஆகியவற்றிலுள்ள பல்கலைக்கழகங்களில் மேற் கொண்டு பல பட்டங்களை தனதாக்கிக் கொண்டார். இவரது மொழியாற்றலையும் சைவத்தின் மீதான தீராத ஆழமான அறிவினாலும் சென்னை சைவ சித்தாந்த சமாஜத் தேர்வுக் குழு- சைவப் புலவர் பட்டம் வழங்கி இவரை கௌரவித்தது.

ஆரம்பத்தில் 1953 தொடக்கம் 1955 வரையான காலப் பகுதியில் சுகாதார திணைக்களம், புகையிரத திணைக்களம் ஆகியவற்றில் எழுதுவினைஞராக கடமை ஆற்றிய இவர், ஆசிரியர் நியமனத்தின் பின்னரான தனது வாழ்வியல் போக்கை எழுத்துத்துறைக்கேஅர்ப்பணித்தார். கவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், கட்டுரை, நாடகம் என்று தனது ஆளுமைகளை எழுத்துறுப் படுத்தினார்.

1951ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரம் தமிழ் கழக உறுப்பினராக 1984 மட்டுக்கும் இடைவிடாது அங்கத்துவம் வகித்தார். அது மட்டுமின்றி, அநுராதபுர வாலிப முன்னேற்றக் கழிகத்தின் தொடக்க கால உறுப்பினராகவும் இக்கழகத்தின் இலக்கிய சஞ்சிகைான 'அன்னை' இதழின் இதழாசரியரகவும் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இவருடைய இலக்கியப் பயணம் விரிவடைந்து சென்றது.

தவிரவும், அநுராதபுரம் கற்புலனற்றோர் சங்கத்திலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையிலும் இவர் அங்கத்துவம் வகித்துள்ளார். 37 வருட கால தனதான ஆசிரியர் சேவையின் பிரதியீடாக வளமான கல்விப் பரம்பரையொன்றை அநுராதபுரப் பிரதேசத்திற்கு இனங் காட்டியிருக்கும் அநு.வை அவர்கள் தனது மாணவர்களாக வட மத்திய மகாண தமிழ் மொழி மூலஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.பீ.எஸ்.ஹமீட் மற்றும் இன்னும் பலரையும் பற்றி சிலாகித்துக் கூறுகிறார். புதுக்கவிதை முன்னோடி அன்பு ஜவஹர்ஷா மர்ஹூம் அமீர் சுல்தான் ஆகியோர்களின் இலக்கியத் தொடர்பாடல் பற்றி ஆர்வமாய்ப் பேசும் அநு.வை. நாகராஜன் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

1971ல் தமிழக அண்ணாமலை இசைப்பட்டதாரி தெல்லிப்பலை சங்கீதப் பூசணம் தென்மயிலை அம்மாயாரை மணம் செய்து இல்லறத்தில் இணைந்த அநு.வை.நாகராஜன் அவர்களுக்கு

படிகள்

பெயர் சொல்லும் பிள்ளையாக நா.சிவாநுஷன் (சங்கர்) ஆவார். இவர் இப்போது கனிணித் துறையில் தொழில் புரிகிறார்.

மிகச் சிறிய குடும்பமெனினும் அள்ளி வழங்கும் அன்புக்கும், ஆதரவுக்கும், மகிழ்ச்சிக்கும் இங்கே பஞ்சமில்லை. என்பதை வெள்ளவத்தையிலுள்ள அநு.வை. நாகராஜன் அவர்களது வீடு சென்ற போது அவதானிக்க முடிந்தது.

1960 முதல் 1975 வரைக்கும் வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, ஈழநாடு, ஒப்சேவர் (ஆங்கிலம்), ஆகிய பத்திரிகை களில் நிருபராக திறமையாக பணியாற்றியதும், இவரது இலக்கியத் தொடர்பாடல் வலுப் பெற்றமைக்கு மிகச் சிறந்த காரணங்களில் ஒன்றாகும்.

மிகச் சிறந்த புகைப்படக் கலைஞராகவும், மேடைப் பேச்சாளராகவும், விமர்சகராகவும், நாடக ஆசிரியராகவும் அறியப்பட்டிருக்கும் அநு.வை நாகராஜன் அவர்கள் அரசியல் ரீதியான நகர்வுகளில் தனக்கு நாட்டமில்லை என்பதை சூசகமாக கூறியுள்ளார்.

ஒரு போராட்ட சூழ்நிலையில் வாழ்க்கை பாரமாகி நிமிட நகர்வுகளைக் கூட அவஸ்த்தையாய் உணரும் ஜீவன்களுக்கு அநு.வை நாகராஜன் அவர்களின் அனுபவங்களும் ஆலோசனை களும் ஆறுதலளிக்கலாம். சமயம் சார்ந்ததும்,ஆய்வு சார்ந்ததும் சிறுவர் இலக்கியம் சார்ந்ததுமான இலக்கியப் படைப்புகள் மீதே அதிக ஆர்வத்தையும் நாட்டத்தையும் கொண்டிருக்கும் அநு.வை நாகராஜன் அவர்களின் அதிக புத்தகங்கள் சிறுவர் பற்றியதாயும், சமயம் சார்ந்தவையாயும் காணப்படுவது அவதானிக்கத்தக்கது.

1971 தொடக்கம் இன்று மட்டுக்கும் சுமார் 15 நூல்களை யாத்திருக்கும் அநு.வை நாகராஜன் அவர்கள் மாணவர் நல்லூர் சோலை, காட்டில் ஒருவாரம், அவன் பெரியவன், சிறுவர் சிந்தனைக் கதைகள், போன்ற சிறுவருக்கு அறிவுறை கூறும் புதுமை நிறைந்துள்ள நூல்களை யாத்துள்ளார். 'ஒரு காலத்துச் சிறுகதைகள் எனும் சிறுகதைத் தொகுதியை 2003ல் வைரமான் பதிப்பாக அநு.வை நாகராஜன் அவர்கள் வெளியிட்டார்கள். இதில் சில கதைகள் அநுராதபுரத்து வாழ்வியல் கோலங்களை 1971 களிலான கலாச்சார கட்டமைப்போடு ஆவணமாக்கித் தந்துள்ளார். மிகச் சிறந்த சிறுகதைகளை கொண்டிருக்கும் இந்நூல், தமிழ், முஸ்லிம், சிங்கள அன்னியோன்ய உறவுகளை படம் பிடித்துக் காட்டுவதோடு மிக நெருக்கமான உறவுகளையும் உணர்வுகளையும் கதைகளுக்கூடாக ஊடுகடத்தி ஆவணமாக்கியுள்ளார்.

இவரது 'காட்டில் ஒரு வாரம்' சிறுவர் நாவலுக்கு 1988ல் கலாச்சார அமைச்சினால் சாகித்திய மண்டல தேசிய விருதும் இலக்கிய வித்தகர் எனும் பட்டமும் பாராட்டும் கிடைத்தது. வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி கலாச்சார அமைச்சினால் 2000ம் ஆண்டுக்கான சிறந்த சமய நூலாக 'பட்டரின் அபிராமி மான்மியம்' விளக்கவுரை ஆய்வு நூல் தெரிவு செய்யப்பட்டு விருதும் பரிசிலும் வழங்கப்பட்டது.

இவ்வாரே வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2002ம் ஆண்டுக்கான சிறந்த சிறுவர் இலக்கிய நூலாக சிறுவர் சிந்தனைக் கதைகள் எனும் நூலுக்கு விருதும் பரிசும்

கிடைத்தது. தொழில் ரீதியாகவும் அநுராதபும் அ/விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், அ/கலாவெவ முஸ்லீம் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றியதோடு தனது கல்வித்துறை சார்ந்த முன்னேற்றங்களில் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையின் துணைக் கல்விப் பணிப்பாளராக இறுதியாக கடமையாற்றி 1994ம் ஆண்டு ஓய்வு பெற்றார். தனது உடல் சுகவீனத்தை ஒரு பொருட்டாக நினையாமல் சமூகம் சார்ந்த காத்திரமான படைப்பிலக்கியங் களை தரத்துடிக்கும், அநு.வை நாகராஜன் அவர்களின் முயற்சியின், வெற்றியின் பின்னணியில் அவரது துணை வியார் மறைந்திருப்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

இலக்கியவாதிகளுடன் மிக நெறுக்கமான இடைத் தொடர்புகளை வைத்திருக்கும் அநு.வை நாகராஜன் அவர்கள் இளம் இலக்கியவாதிகளை தூண்டி விடுவதும், ஆர்வ மூட்டுவதிலும் என்றுமே பின்னின்றதில்லை.

நவீன இலக்கியச் சூழலில் மிகச் செறிவுடைய இலக்கியச் சிந்தனைகளை அவ்வப்போது ஆவணப்படுத்தும் இந்த மூத்த இலக்கியவாதியின் திறமையை மெச்சும் வகையில் 1988களில் மல்லிகை இவரை அட்டைப் படத்தில் அமர வைத்து அழகு பார்த்தது. வெகுவாக அடிமட்ட வர்க்கத்தினை குறிவைத்து படைக்கப்படும் இலக்கியங்கள் மிகக் குறைவாக இருப்பினும் அநு.வை நாகராஜன் அவர்களின் படைப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரு மருந்தாய் அமையுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. தனது வாலிபப் பருவத்தில் அதி தீவிரமான தேடலும் ஆளுமையும் இலக்கியத்திற்காகவே அர்ப்பணித் திருந்த அநு.வை நாகராஜன் அவர்கள் தன்து 'கருத்தும் எழுத்தும்' எனும் கட்டுரைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள அனேகமான கட்டுரைகள் மிகுதியான ஆய்வினதும் தேடலினதும் வெளிப்பாடாகவே தந்திருப்பது கவனத்தில் பதிய வேண்டியதாகும்.

திறந்த மனதுடன் கருத்துக்களை முன்வைக்கும் அநு.வை நாகராஜன் அவர்கள், இலக்கியப் பேச்சுக்களில் சலிப்படைவதே கிடையாது. இன்னும் அநுராதபுரத்தில் தான் வாழ்ந்த அந்த நீண்ட காலப் பதிவுகளை அலுக்காமல் அசைபோடும் அநு.வை நாகராஜன் அவர்கள், மிதவாத இலக்கியப் போக்கிலும், மிகுந்த முரண்பாடுடையவர். இலக்கியத்தால் இனம், மதம், மொழி கடந்த உறவுகளை வலுப்படுத்த முடியும் என அதிகமாய் நம்புபவர். இனவாதத்தை முற்றாக வெறுக்கும் ஒரு சைவப்புலவர் இவரென்றால் அது மிகையாகாது.

தலைத்து, செழித்து வளர்ந்தவுடன் பசுமைக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கும் உலகம் ஊடுருவி நீர்த்தேடி, மரத்தை வளர்க்க மறைந்திருந்து போராடும் வேர்களை கண்டு கொள்வதில்லை என்பது நியதியாய்ப் போய்விட்டது. வேர்களிலும் வெளிச்சம் விழ வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட எதிர்ப்பார்ப்பு அந்த வகையில் அநு.வை நாகராஜன் அவர்களும் அநுராதபுர மாவட்ட தமிழ் இலக்கியத்திற்காய் தன்னை அர்ப்பணித்த வேர்களில் ஒருவர் தான்.




ஜனஸி கபூர்
அநுராதபுரம்

வண்ணப் பூச்சிகளின்
சின்னச் சிறகதனில்
சிலுவைதனையறைந்தே
சிதறும்
சரீரத்தின் சாரீரத்தை - காற்றிலே
நிரப்பி
நேயத்தை..... மானுட நேயத்தை
நெருஞ்சிக்குள் அடைகாக்கும்
நெகிழா... மானிடா
இன்றுமா
சத்தியத்தின் இமைகளில்
சத்தமின்றி ஆணியறைந்தே
வன்முறைக்குள் வழுக்குகின்றாய்!

அலைப் பேனாவின்
சுனாமிக் கவிக்காய்
வாழ்வின் வசந்தங்களை
இரவலாக்கி
கண்ணீரத் திராவகத்துள்
கனவுகளைத் தேடும் நல்லிதயங்களே!
இன்றுமா சுணக்கம்!
தண்ணீர வரைந்த விதியை
தன்னம்பிக்கையோடு மாற்ற!

ஓ.. பெண்ணே உன்
மனப் பாறைதனில்
படிவுகளாய் வார்க்கப்பட்ட
ஆணாதிக்க தளும்பு கண்டு
ஒளி உமிழும் பௌர்ணமி கூட
ஓய்வின்றி கதறுகிறதே
சாம்பர் முகடு - உன்
சரித்திர ஏடென்ற
சரித்திரத்தை சாம்பராக்கு
இன்றுமா தயக்கம்!
அடிமை விலங்கதனை
அறுத்தெறிய!

சொப்பனச் சுழிக்குள்
சந்தோஷமாய் அமிழ்ந்து
விடியலின் குரலுக்காய்
விழி பார்த்த வேளையில்
விதி சொன்னது அகதியென

ஓ...
அகதித் தளிர்களே!
இன்றுமா தயக்கம்! - நீவிர
சிதறப்பட்ட தேசத்துள் -
மீண்டும்
சிறகு விரிக்க!



# யாரோ முந்தியவர்.

எப்.எப். சப்ரினா

மனசு ஒரு மயான சூன்யத்தில் மௌனித்திருந்தது. எத்தனை நாட்களாகத் தான் நானும் எண்ணியெண்ணி வருந்துகிறேன். எத்தனை கோணங்களில் யோசித்தாலும் அத்தனைக்குள்ளும் அந்த "அழகு முகமே" ஒளிர்கிறது.

சுருண்ட கேசத்தினுள்ளே ஜொலிக்கின்ற அழகு முகம். பார்த்ததும் பாசத்தைக் கொட்ட வேண்டும் போல அப்படி ஒரு முக அமைப்பு.

கண்களில் தெரிகின்ற தவிப்பு. ஏனென்று தெரியவில்லை. சொல்லாமலே உயிரின் கணுக் களிலெல்லாம் பசை போட்டு ஒட்டிக் கொண்டது போன்று எனக்குள் வியாபித்தது அந்த ரோட்டோரக் குழந்தை.

இப்போ இந்தப் பாதைகளால் பயணிப்பதே அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்போடுதான்.

அது—பாதையோரத்து ரோஜா. முட்களின் நடுவில் முளைத் திருக்கின்றது. எட்டிப்பறித்து சூடுவதற்குத் தான் எனது இத்தனை பிரயத்தனமும்...

முடியுமா? முடிய வேண்டும். எத்தனை அற்புதமான குழந்தை அது. வானம் விரித்த கூரையின் கீழ் கந்தல் துணிச் சுருளைக்குள் சுகம் காணுகிறது.

மனித மாணிக்கம் மண்ணில் கேட்பாரற்றுக் கிடக்கிறது. விதியின் வசத்தால் அல்லவா நாம் இழுத்துச் செல்லப்படுகிறோம். அப்படியானால் இந்தக் குழந்தையைப் பார்த்ததுவும் அதனை என் குழந்தையாக்க வேண்டும் என்கிற வேட்கையும் அந்த நியதியில் நிகழ்ந்தவையா?

தெரியவில்லை. விடையில்லா ஆயிரமாயிரம் வினாக்கள் எனக்குள் விளைந்தாலும் அதற்குள்ளும் அந்தக் குழந்தை முகம் மட்டுமே ஒளிர்கிறது.

மாதம் ஒன்றைத் தாண்டுகையில் என் மனசு முழுக்க வேர் விட்டு விருட்சமாகிப் போயிருக்கிறது குழந்தை.

பல நாட்கள் யோசித்தாயிற்று. இவரிடம் பேச வேண்டும். குதிப்பார், நார் நாராய்க் கிழிப்பார்.

ஆனாலும்.... ஆனாலும்....

அந்த ரோட்டோரக் குழந்தை எனக்கு வேண்டும்..

"தத்து எடுத்து வளர்ப்பதென்றால் அனாதை விடுதியில போய்ப் பொறக்கு. உன்னைக் கைப்பிடித்ததற்கு கல்லைக் கைப்பிடித்திருக்கலாம். மலடி. உனக்கு மலட்டுப் பட்டமும் கட்டி, இனிப் பைத்தியகாரப்பட்டமும் கட்ட வேணும். அந்த நோட்டோரக் குழந்கைக்கு என்னென் வியாதியோ?"

வார்த்தைகளால் எரித்தார்.

ஆனாலும் மனது கரையவில்லை. பூப்போல புதியதாய் இருக்கும் அந்தக் குழந்தை எனக்கு வேண்டும் என்பதைத் தவிர,

யாரோ பெற்ற அந்தக் குழந்தைக்காக குடும்பத்தையும் அறுந்துப் போகுமளவுக்கு அவளுக்கு மனசு வெறுத்தது.

ஓ... வேலையிருக்கிறது. அது எனக்கும் அந்தக் குழந்தைக்கும் கடைசி வரை கஞ்சுக் குடிக்க காணும் என்றில்லை. மகாராணியாக வாழ வைக்கவே போதும்.

போராட்டத்தில் எனக்கு வெற்றி. ஞாயங்கள் பேசிப் பேசி.... நாட்களின் நகர்தலில் அவர் சம்மதித்தார்.

மழை மேகங்கள் கருக்கட்டும் நாட்களில் வெறிச் சோடியிருக்கின்ற எனது மாளிகையும் வானக் கூரையின் துணிச்சுருளைக்குள் கிடக்கின்ற அந்த மல்லிகைப் பூக்குழந்தையுமே மனசுக்குள் மத்தளம் கொட்டினர்.

பூர்வ ஜென்ம பந்தம் என்பார்களே. அதைப் போல இந்த ரோட்டோரக்குழந்தை எனக் கென்று இறைவனால் தயாரித்து அனுப்பப்பட்டதா? எனது குழந்தையைத்தான் இன்னொரு கருவறை சுமந்ததா?

என்னவென்று புரியவில்லை. அந்தக் குழந்தையைப் பெற்றவர்களிடம் பேச வேண்டும். தருவார்களா?

போராடிப் பார்க்கலாம்.

ரோட்டிலே இருக்கின்ற அந்தக் குட்டி ராணியை பெற்றவர்கள் தர விரும்புவார்களா? ஏழையென்றாலும் குழந்தைப் பாசத்தை விலை கொடுத்து வாங்க வருவார்களா,? தர முடியாது என அவர்கள் முடிவாய்ச் சொன்னால்....

ஓ... அதன் பின்னால் அதன் இருப்புக் கூட சங்கீதமே என்பதாய்ப் பட்டது.

சரி முயற்சிப்போம். தனியாகவே சென்றென். முடிவுக்கு வந்தவளாய் தனியாகத்தான் சென்றென்.

நேர்ச்சைகள் வரிசை வரிசையாக தெய்வங்களை சிபாரிசுக்கு அழைக்க—

அந்த மந்தாரப் பொழுதில்... மாடி வீட்டின் மகா ராணியாகப் போகும் அந்த ஏழைக் குழந்தையை எடுத்து வர தனியாகவே சென்றேன்.

ஆயிரமாயிரம் குழந்தைக்கு மத்தியில் இது மட்டும் ஏன் என்னை இத்தனை தூரம் ஆட்டிப்படைக்கிறது.

தூரத்தில் கூட்டமாய்...

கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே வேகத்தோடு செல்கிறேன் நான்.

நீட்டியிருந்தது குழந்தை.

"பின்னயின்ற கழுத்துக்கு மேலால லாறி ஏறிட்டாம்."

கூட்டத்தில் யாரோ கூவிக் கொண்டிருந்தார்கள்.

ஏழு வானங்கள் ஒன்றாய் இடிந்து விழுந்து என் தலையில் நொறுங்கியதாய் உட்கார்ந்தேன் நான்.

"இதப்பாரு லாறிய ஏத்தினதால இன்னம் அஞ்சு நூறு போட்டுக் குடு. இல்லேன்னா பொலிஸ் கேசுன்னு போயிருவேன்." அந்தக் குழந்தையின் தாய் பேரம் பேசிக் கொண்டிருந்தாள். அந்த பகைவரின் கையில் இரண்டு பச்சை நோட்டுக்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

இங்கு முந்தியவர் யாரோ?! மனதால் மரணித்துக் கொண்டிருந்தேன் நான் !!!

♁ ♁ ♁ ♁

# மௌனம்

மேகமழைத் தடுக்க
குடைக்கவசம்
விழி மழைத்தடுக்க
என்ன கவசம்..

பஞ்ச பாண்டவருக்குள்
அகப்பட்ட
த்ரௌபதியாய் என்
பேனாவும் விக்கித்தவிக்க,
மனதின் மாசுக்கள்
கழுவப்படுகின்றன கண்ணீரால்-

மற்றவன் குறை தடுக்க
ஆண்டவன் நம்மை
தோன்றவைத்தானென்றே
ஒவ்வோர் ஆத்மாவும்
நினைக்கிறது-
நித்தம் குற்றங்களுக்கோ
குறைவில்லை.

யாரின் மௌனமும்
எதையும் பேசுவதில்லை:
உள்ளுர பேசுவதை-தன்
உள்ளம் மட்டுமே
கேட்கவும் தேவையில்லை.

தீர்வுகள் தேவையெனில்
உலகில்
மௌனங்கள் - தற்
கொலை செய்ய வேண்டும்.
கறை படிந்த கண்கள்
கழுவப்பட வேண்டுமெனில்
கருத்துக்கள்
செவிக்குள் விழ வேண்டும்.

ஆகவே,
மௌனங்களை சிரச் சேதம்
செய்யுங்கள்
துன்பிக்கவும்:
இன்பிக்கவும் நமக்கானதாய்
புத்துலகம் வனையப்படும்.

ஏ. எஸ். ஷர்மிலா
அநுராதபுரம்

இங்கு கூறப்பட்ட வீர முழக்கத்தை மொழிந்து, உலகில் உள்ள அனைவர் மனதிலும் மறக்க முடியாக் கதாநாயகனாக திகழ்பவர் தான் வங்காளச் சிங்கமான சுபாஷ் சந்திரபோஸ். இவர் சிறந்த அரசியல்வாதி மட்டுமல்ல, ஆன்மீகவாதி. ஆழ்ந்த ஞானம், அறிவுக்கூர்மை கொண்ட பேச்சாளர், செயலாளரும் கூட. தம் ஆயுளையே இந்திய விடுதலைக்காக தியாகம் செய்த இந்த தியாகியின் 60வது சிரார்த்த தினம் இவ்வருடம் ஆகஸ்ட் 18ம் திகதியாகும்.

இவரைப் பற்றி புகழாத உலக அறிஞர்களே இல்லை. அவர்களுள் அயர்லாந்து (IRELAND) விடுதலை புரட்சித் தலைவர் ஈமன் டிவேலரா, அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ஜப்பனிய பிரதமர் டோஜா, பர்மிய விடுதலை இயக்கத் தலைவர் அவுங்ஸான், மகாகவி தாகூர், அகிம்சாவாதி காந்தி போன்றவர்கள் முக்கியமானவர்கள். எனவே நாமும் நேதாஜியின் வீர வாழ்க்கை பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

சுபாஷ் சந்திரபோசின் 60வது சிரார்த்த தின விசேட கட்டுரை.
(2005.08.18)

# சுபாஷ் சந்திரபோஸ் (நேதாஜி)

– மரீனா ஹமீட் கட்டுகஸ்தொட்டை.

*இந்தியா வாழ்ந்தால் எவரே வீழ்வார்.*
*இந்தியா வீழ்ந்தால் எவரே வாழ்வார்.*

சுபாஷ் சந்திர போஸ் 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் திகதி வங்காள மண்ணில் "கோடாலி" என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை ஜானகினாத் போஸ் ஆவார். இவர் ஒரு வழக்கறிஞர். தாய் பிரபாவதி தேவி. இவர்களுக்கு 9வது குழந்தையாக நேதாஜி பிறந்தார்.

நேதாஜி தம் ஆரம்பக் கல்வியை கட்டாக் நகரில் உள்ள "பாப்டிஸ்ட் மிஷன்" ஆரம்பப் பள்ளியில் கற்றார். இங்கு கற்று 7 வருடத்தின் பின் கல்கத்தாவில் உள்ள "ரேவன் ஷா" கல்லூரியில் (உயர் நிலைப்பள்ளி) சேர்ந்து மெட்ரிகுலேஷன் கல்வியை கற்றார்.

சிறுவயதிலிருந்தே இவருக்கு கல்வியை விட துறவரத்திலே அதிக நாட்டம் இருந்தது. அதனால் தம் 16ம் வயதில் துறவு ஞானம் பூண்டு கொள்ள எண்ணி பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினார். எனினும் 2 மாதத்திற்குப் பின் வீட்டுக்கு திரும்பி விட்டார். தன் மகனின் துறவு நாட்டத்தைப் பற்றி அறிந்த ஜானகிநாத் போஸ் 1915ம் ஆண்டு நேதாஜியை கல்கத்தா "பிரசிடென்சி" கல்லூரியில் சேர்த்தார். அதில் சேர்ந்த சுபாஷ் சந்திர போஸ், புது முக வகுப்பில் (F.A) வெற்றி பெற்றார். 1919 செப்டம்பர் 15ம் திகதி லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திற்கு ஐ.சி.எஸ்.(I.C.S) பட்டம் படிக்கச் சென்றார். பின் தம் 23ம் வயதில் இங்கிலாந்தில் தனக்கு கிடைத்த தொழிலை ராஜினாமாச் செய்தார். இதற்கு தாய்நாட்டின் மீதிருந்த பற்று காரணமாகும்.

இங்கிலாந்திலிருந்து தாய் நாட்டுக்கு திரும்பிய நேதாஜி, அரசியலுக்கு நுழைந்தார். படிப்படியாக பல்வேறு பதவிகளை வகித்த இவர், காரணம் எதுவுமின்றி பிரிடிஷ் காரர்களால் 1924 ஒக்டோபர் 25ம் திகதி "மாண்டலே" சிறையில் அடைக் கப்பட்டார். சுமார் 3 வருடங்கள் . சிறையில் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்தும் காசநோய் பீடிக்கப்பட்டும் அவதிப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த பின் பத்திரிகையில் பிரிடிஷ் ஆட்சியினை, நடத்தை களை கண்டித்து கட்டுரைகளை எழுதினார்.

1938ம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட . நேதாஜி இதற்குப்பின் மீண்டுமொருமுறையும் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். எனினும் இரண்டாவது தடைவையாக இவர் தலைவர் பதவியை வகிக்கும் போது கட்சிக்குள் இருப்பவர்களாலே பல்வேறு பிரச்சினைகள் உருவாக்கப்பட்டது. இதற்கு மத்தியில் 1939ம் ஆண்டு தன் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு, 1939 மே முதல் திகதியில் "பார்வர்டு பிளாக்" என்ற புதிய அமைப்பை தொடங்கி தன் செயல்களை முன்னெடுத்தார்.

தான் சிறையில் இருக்கும் போதும் மற்ற நேரங்களிலும் நேதாஜி, காந்தி, நேரு, முஹம்மத் ஜின்னாஹ் போன்றவர்களுக்கு கடிதங்களை எழுதுவார். இதில் காந்திக்கு எழுதிய கடிதங்கள் முக்கியமானவை ஆகும் உதாரணமாக, "if for any reason that confidence is shaken – which god forbidand you are regarded as a partism, then god help us and the congress".

பார்வர்டு பிளாக் அமைப்பை தொடர்ந்து செயற்படுத்திய சுபாஷ் சந்திர போஸ் 1941 ஜனவரி 16ம் திகதி யாருக்கும் தெரியாமல் தன் வீட்டை விட்டு ஜேர்மனுக்கு சென்றார். "சிக்னர் ஆர்லண்டோ மே ஜோர்டர்" என்றழைக்கப்படும் இம்மகத்தான தப்பித்தல் பற்றி அறியாத மக்கள் நேதாஜி எங்கே என்று பல்வேறு கருத்துக்களை கிளப்பினர்.

பிரிடிஷ் ஆட்சியில் இந்தியாவில் இருந்து கொண்டே (இந்திவுக்கு) விடுதலை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என்பதை அறிந்தே நேதாஜி ஜேர்மனுக்கு சென்றார். பின் ஜேர்மன் அரசு உதவியுடன் "யூ போர்ட்" என்ற நீர் மூழ்கிக் கப்பலில் சுமார் 3 மாத கால பயணத்தின் முடிவில் ஜப்பானை வந்தடைந்தார். அன்றைய ஜப்பானிய பிரதமராக இருந்த டோஜா, நேதாஜிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார். இதன் பலனாக கலங்கமற்ற தேச பக்தி, மாசற்ற நீதி, சாதி சமய வேற்றுமையின்மை போன்ற கொள்கையுடன் நேதாஜி 1943 ஒக்டோபர் 23ம் திகதி "தற்காலிக சுதந்திர இந்திய அரசை" அமைத்தார்.

இதில் இளைஞர்கள் இராணுவ வீரர்கள் மட்டுமல்ல பெண்கள் படைப்பிரிவு கூட அமைக்கப்பட்டது. தொட்டிலை ஆட்டும் கைகள் துப்பாக்கி ஏந்திப்

போரிடத் தயங்காது. என்பதை இவர்கள் நிரூபித்தனர். மக்கள் அனைவரும் ஒன்று கூடி பல்வேறு நிதி வசதிகளை வசூல் செய்து தம் வீரத்தலைவர் நேதாஜியின் ஆசாத் ஹிந்த் அரசுக்கு வழங்கினர். அத்துடன் ஜப்பான் கட்டுப்பாட்டில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளை ஜப்பான் அரசு தற்காலிகமாக நேதாஜி அரசுக்கு வழங்கியது. இதன் பிறகு பல கஷ்டங்களுக்கு மத்தியில் இந்திய தேசிய இராணுவம் (I.N.A) "இம்பால்" முற்றுகையை மேற்கொண்டது. "ஜெய்ஹிந்த்", "சலோ டில்லி" என்ற முழக்கத்துடன் இராணுவ வீரர்கள் போரிட்டாலும் இடையில் இம்முற்றுகை கைவிடப்பட்டது.

வெள்ளையரிடம் இருந்து தம் தாய் நாட்டின் விடுதலைக்காக யுதத் நடவடிக்கை நிலைமையை அறிய மட்டும் நேதாஜி ஒரு நாளைக்கு 20 மணித்தியாலத்தை விவாதத்திற்காக ஒதுக்குவார். இப்படிப்பட்டவருக்கு 1944 ஒக்டோபரில் ஜப்பான் அரசு "எழு ஞாயிறு" (FIRST OR DED OF THE RISING SUN) விருதை வழங்க முடிவு செய்தது. ஆனால் நேதாஜி இதை மறுத்து விட்டார். தம் தாய் நாடான இந்தியா எப்போது சுதந்திரம் அடைகிறதோ அப்போதுதான் இதைப்பெறுவதாகக் கூறினார்.

காஸ்போக்கில் ஜப்பான் அரசு பிரிடிஷ் காரரிடம் சரணடைந்ததை அடுத்து நேதாஜியும் சகாகட்களும் தய்லாந்து பேங்கொக்கிற்கு சென்றனர். இந்நேரத்தில் ஜப்பான் உதவியைப் பெற முடியாமல் இருந்த நேதாஜி, ரஷ்யாவுக்கு சென்று சோவியத் யூனியனின் உதவியைப் பெற நாடி, கூட்டத்தாருடன் கலந்துரையாடினார். இதன் நிமித்தமாக தாய்லாந்திலிருந்து மஞ்சூரியாவுக்கு செல்லும் விமானத்தில் 1945 ஆகஸ்ட் 17ம் திகதி சைக்கோனிலிருந்து பயணமானார். ஆனால், இவ்விமானம் ஆகஸ்ட் 18ம் திகதி பிற்பகல் வேளையில் தைக்கோகு விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது. சில மணி நேரத்தின் பின் சுபாஷ் சந்திர போஸ் உயிர் நீத்தார்.

இவருடைய மரணத்திற்கு பின்பே இவரின் திருமண வாழ்க்கை பற்றி அனைவருக்கும் தெரிய வந்தது. அவுஸ்திரிய வியன்னா பெண்ணான எமிலி சென்கல் என்பவருடன் நேதாஜி மணமுடித்து அனிதா போஸ் என்ற மகளும் இருப்பதான செய்தியாகும்.

விபத்தில் இறந்த நேதாஜி இறக்கும் முன் இறுதியாக 1945 ஆகஸ்ட் 15ம் திகதி இந்திய I.N.A படைக்கு தன் இறுதி அறிக்கையை விடுத்தார். சாகும் தருணத்தில் கூட தாம் கடைசி வரையும் இந்திய விடுதலைக்காகவே போராடியதாக இந்திய மக்களிடம் கூறும்படி சொன்னார். இந்த தியாகி இறந்தாலும் என்றும் இந்தியர்கள் உள்ளத்தில் மட்டுமல்ல உலக மக்கள் அனைவரின் உள்ளத்திலும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

●

**படிகள் இதழ் 01ல் வெளிவந்த (ஒக்டோபர் 2003) "வரந்தர வேண்டும்" எனும் கவிதை (அன்பு ஜவஹர்ஷாபிரீவுபசார மலர்) பிறையொளி 37ல் மீள் பிரசுரமாகியது.**

**-ஆசிரியர்-**

# இன்னொரு இரவு

**விக்னா**

என் தூக்கம் தொலைந்த
இன்னொரு இரவு இது
படுக்கையில்.... .
உருண்டு கொண்டே
பயங்கரமாய் நீளும்..
இந்த இரவினை
வெறித்தபடி நான்

இரவு இத்தனை கொடுமையா?
நீண்டு நெளிந்து செல்லும்
பாலைவனப்பாதையாய்
எல்லை தெரியாமல்
விரிந்து செல்லும்
இந்த இரவின் மீது
எனக்குப் பிடிப்பில்லை

புத்தகம் வாசித்தல்,
பாட்டுக் கேட்டல்
டி.வி பார்த்தல்
எந்தப் பொழுது போக்கினாலும்
இந்த இரவை
போக்க முடியவில்லை



தொடரும் மவுனத்தில்
வெறும் காற்று மட்டுமே
தலை காட்டிச் செல்கிறது
நிலவு நகர்வதாய் தெரியவில்லை
பகல் முழுதும் ஓடிய களைப்பில்
கடிகார முட்கள்
உறங்குவதாய் எனக்குப்படுகிறது.

இது என்ன அவலம்
ஒரு இரவே இத்தனை கொடுமையா?
இருந்தும் நன்றி உனக்கு
இரவின் மகிமையை
இப்போதாவது புரியவைத்தமைக்கு !

# கல்வியும், கண்ணியமும் நிகழ்காலத்தில் வேறு வேறா?

கற்றல் என்பது தான் அறியாததை அறிந்து கொள்ளல், எண்ணங்களை பிறருக்கு விளக்கப் பயன்படுத்தும் ஓசை மொழியாகவும், வரிவடிவம் எழுத்தாகவும் உருவ வரைபு ஓவியமாகவும், உருவ வடிவமைப்பு சிற்பமாகவும் கலை வடிவம் எடுக்கிறது.

சில தசாப்தங்களுக்கு முன் கற்றோர் என்போர் நீதி, நெறி பிறழாத, பரந்த நோக்குடைய கண்ணியத்திற்குரியோர் என்ற மனோபாவம் மக்களிடத்தே நிலவினாலும் தற்காலத்தில் கல்வி, உழைப்பதற்கான வழி என்றாகி விட்டது. கண்ணியம் வேறு கல்வி வேறு என்ற மனோபாவம் வளர்ந்து வருகிறது.

பட்டங்களை பறைசாற்றும் அட்டைகளுக்கும், பதாதைகளுக்கும் வழங்கப்படும் கௌரவம், மனிதாபிமானத்திற்கு வழங்கப்படுவது குறைந்து வருகிறது. சேவை என்பது மனிதாபிமான நோக்கோடு மட்டுமன்றி புகழுதியம் பெறும் நோக்கு களுக்காகவும் ஆற்றப்படுகிறது.

ஒரு சமூகத்தில் கல்வியை பெற்ற சாரார் தமது பதவிகளை அடைந்த பின் ஏனையோர் அந்த இடங்களுக்கு வருவதை தடை செய்வதிலே முனைப்பாய் இருப்பதை காண்கிறோம். தன் சமூகத்தைச் சேர்ந்தோர் கற்கவில்லையே எனக் கதறும் கற்றோர், கற்க வழிதெரியாது தடுமாறுவோருக்கு கை கொடுக்காது விட்டாலும், வழியைக் காட்டவாவது மனமில்லாமல் இருக்கிறார்கள். கற்றோரிடத்தில் பரஸ்பரம் நிலவும் பதவிப் போட்டி, பொறாமை, பூசல்கள் கல்வியின் மதிப்பை குறைக்கின்றது.

கிராம மட்டத்தில் கற்றோர் என மதிக்கப்படும் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய விஸ்தரிப்பு உத்தியோ கத்தர்கள், ஆசிரியர்கள், இலிகிதர்கள், சுகாதாரப் பரிசோ தகர்கள் அவரவர் துறைகளில் மலினப்படுத்தியிருக்கும் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்பன கற்றோர் எனும் போது கயமை கலந்தோர் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

கற்றலும், பட்டங்களும் உழைக்கும் வழி என்று ஆனதால் கற்கிறோமோ இல்லையோ எந்த வழியிலாயினும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற வெறி ஏற்பட்டு முறை தவறிய வழிகளில் கூட பெறுபேறுகளைப் பெற சமூகம் ஆலாய்ப் பறக்கிறது. இதனால் திறமையற்ற உத்தியோகத்தர்களும், அவர்களால் உருவாக்கப்படும் இளம் சமுதாயமும் பொருளாதாரத்திலும், பதவியிலும், வளமானதும் விடய ஞானத்தில் தகைமை குறைந்ததுமாக உருவாக்கப்படுகிறது.

முறை தவறி உருவாக்கப்படும் இந்தப் போலிகள் பெருகப் பெருக தலைமை முதல் கடைநிலை ஊழியர் வரை

போலிகளால் நிரம்ப, கடமை, கண்ணியம், காருண்யம் என்பன நிஜத்தன்மையினை இழந்து, பேதமையும், மோசடியும் சாதாரணமாகிறது.

நாம் வாழும் இச்சூழலிலும் மேற்சொன்ன பாதிப்புகள் உள்ளதால் கல்வியும் கண்ணியமும் இணைந்து செல்லவில்லை. இணைந்து செயற்படவுமில்லை என்ற

படிகள்

நியாயத்தை தோற்றுவிக்கின்றன. இதற்கு சிறந்த உதாரணங்களைப் போலதான் தேரிய சர்வதேச மட்டங்களில் ஊடகம், சட்டம், பொருளாதாரம், அரசியல் என்னும் துறைகளில் நியாயங்கள் சுயலாபங்களால் மறைக்கப்பட்டு அந்தி, அநியாயம், அராஜகம், பொய், ஒழுக்கக் கேடு சுரண்டல் என்ற நவீன சமுதாயத்தின் நாகரிக விழுமியங்கள் எனப் பூச்சாண்டி காட்டுகின்றன.

நாம் கற்றோர் எனப் போற்றுவோர்தான் இதன் காவலர்களாக திகழ்கிறார்கள் என்பதே நிதர்சன உண்மை. ஆனாலும் இன்னும் உலகின் கல்வியின் சிறந்த கண்ணியமிக்க அறிஞர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது ஆறுதல் தருகிறது. அந்த ஆறுதல் நிலைக்க வேண்டுமென்பதே மக்களின் நியாயமான எதிர்ப்பார்ப்பாகும்.

••••

அபூ நுஹா
நாச்சியாதீவு


வெளிவந்துவிட்டது..

நாச்சியாதீவு பர்வீனின்

சிரட்டையும் மண்ணும்

(கவிதைத் தொகுப்பு)

தற்போது விற்பனையில் உள்ள இந்நூலை கொள்வனவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ப்ரிஸ்ம் சமூக அபிவிருத்தி அமைப்பு
87/24, தர்மபால மாவத்தை
அநுராதபுரம்
071-4837524


## ஹைக்கூ

மயான முற்றத்தில்
மௌனித்திருப்பது நீ மட்டும் தான்
மலர் வளையம் !

மழையே உங்கள்
வரவையெண்ணித்தான்
காத்திருப்பது
கோடை கால நிலங்கள் !

- எல். வஸீம் அக்ரம்


படிகள்
கிடைக்குமிடங்கள்

எம்.எம். ஹபீழ்
அர்சாத் மோட்டர்ஸ்
கஹடகஸ்திகிலிய

யு.எம். ஹிமாஸ்.
ஹிமாஸ் புக் சொப்
இக்கிரிகொள்ளாவ

ஜே.எம். பர்ஹான்
பண்டாரபொதான
புப்பேகம
கெக்கிராவ

இன்போஸிஸ்
கணனிக் கல்வியகம்
தர்மபால மாவத்தை
அநுராதபுரம்
மற்றைய, தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கருகில்

நாச்சியாதீவு பர்வீனின்

# "சிரட்டையும் மண்ணும்"

## கவிதை

## நூல்

## வெளியீட்டு

## விழா

~ எல். வஸீம் அக்ரம்.~

அண்மைக்காலங்களில் அநுராதபுரத்தில் தமிழ் கலை, இலக்கிய நிகழ்வுகளை அதிகளவு நுகரக்கூடியதாக இருக்கிறது. இதன் இன்னொரு கட்டமாக அநுராதபுர மாவட்டத்தின் அவதானத்திற்குரிய படைப்பாளிகளில் ஒருவரான இளங்கவிஞர் நாச்சியாதீவு பர்வீனின் சிரட்டையும் மண்ணும் கவிதை நூல் வெளியீட்டு விழா அமையப்பெற்றது. ப்ரிசம் (Prism) சமூக அபிவிருத்தியமைப்பு அதன் மூன்றாவது ஆண்டை முன்னிட்டு வெளியிட்ட மேற்படி நூலின் வெளியீட்டு விழா 2005.09.11 அன்று பிற்பகல் 4.15 மணிக்கு கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையில் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் அநுராதபுர தமிழ் கலை இலக்கிய வளர்ச்சி தொடர்பான ஆழமான கருத்துக்களை உவகையுடன் தெரிவித்தார். மேலும் வெளியீட்டுரை நிகழ்த்திய அநுராதபுரம் பிரிசம் சமூக அபிவிருத்தியமைப்பின் தலைவர் ஜனாப் எம்.ஏ.எம்.டில்ஷான் தனதுரையில் சமூக ரீதியான செயற்றிட்டங்களுள் பதிப்புத் துறையும் ஒன்றாகும். எனவே இதன் மூலம் அறிவுபூர்வமான சமூக மாற்றங்களை நாம் எட்ட விழைகிறோம் எனக்குறிப்பிட்டார்.

நூலறிமுகம் நிகழ்த்திய ஜனாப் எம்.எஸ்.லதீப் (BEd.T.Sp) அவர்கள் நூலின் உருவாக்கம் உட்பட அதன் வடிவமைப்பு ரீதியான அம்சங்களையும் சிறப்புக்களையும் குறிப்பிட்டார்.

நூலாய்வுரையில் மேமன்கவி அவர்கள் "சிரட்டையும் மண்ணும்" கவிதை நூல் யதார்த்தமானதும் காலத்திற்கு பொருத்தமானது மான பல படைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.மேலும்இத்தொகுதியில் பர்வீனின் ஆரம்ப கால படைப்புக்களையும் நுகரக்கூடிய தாகவுள்ளது. இருப்பினும் பல முதிர்ச்சியான படைப்புகளும் காணப்படுகின்றன. எனக்குறிப்பிட்டதுடன் மிக ஆழமான விமர்சனங்களையும் கவித்துவமாக முன்வைத்தார்.

இவ்விழாவில் சிறப்புரையில் அநுராதபுரம் விவேகானந்தா சபை தலைவர் திரு சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரன் குருக்கள் (J.p)அவர்கள் தமிழ் மொழி அநுராதபுர மாவட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பாதுகாக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டதுடன் புத்திஜீவிகள் இது விடயத்தில் மேலும் ஆவன செய்ய வேண்டுமென்பதை சுட்டியிருந்தார் அதேவேளை சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரன் குருக்கள் (J.p) தமது சபை சார்பாக நாச்சியாதீவு பர்வீனுக்கு பொன்னாடைகௌரவிப்பொன்றை வழங்க, அன்பு ஜவஹர்ஷா அவர்களை விண்ணப்பித்திருந்தார்; அந்த அன்பு வேண்டுதலை அன்பு ஜவஹர்ஷா அன்புடன் பர்வீனின் தந்தை அதிபர் ஜனாப் எம்.அப்துல் றஹீம் அவர்களால் இக்கௌரவிப்பு நல்கப்பட வேண்டுமென விதந்துரைத்தமை குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்தது.

இவ்விழாவில் தொலைக்கல்வி சிரேஷ்ட்ட போதானாசிரியர் ஜனாப் ஏ.ஏ.ஜப்பார் அவர்கள் நாச்சியாதீவு பர்வீனின் சுயம் தொடர்பாகவும், அவரது ஆளுமை தொடர்பாகவும் கருத்துரைத்தார்.

ஏற்புரையில் நாச்சியாதீவு பர்வீன் இம்முயற்சி வெற்றி பெற பங்களித்த அனைவருக்கும் நன்றிகளை சமர்ப்பித்ததுடன், இந்நூல் தொடர்பாக எழும் விமர்சனங்களை தான் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் இலக்கிய ஆர்வலர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட பல்வேறு புத்திஜீவிகள் கலந்து சிறப்பித் திருந்தனர்.

இந்நிகழ்வுகளை இலங்கை ஒ.கூ.தென்றல் அலைவரிசை அறிவிப்பாளரும் படைப்பாளியுமான எம்.சி.றஸ்மின் அவர்களும் (ஹொரொவ்பொதானை), அறிவிப் புத்துறையில் ஆரம்பப்படிகளை எட்டிவரும் எம்.சீ.நஜிமுதீன் அவர்களும் சுவைபட தொகுத்து வழங்கினார்.

இந்த விழா, அநுராதபுர மண்ணில் இலக்கியக் கூட்டங் களை தொடர்ந்து நடத்தலாம் என்பதை துணிந்து கட்டியம் கூறக்கூடிய நம்பிக்கையை நிறுவியிருந்தது.


**வெளிவந்துவிட்டது**
**கெக்கிராவ ஸஹானாவின்**

*"இன்றைய வண்ணத்துப்பூச்சிகள்"*

**தொடர்புகளுக்கு**
32/21
செக்குப்பிட்டிய சௌத்
செக்குப்பிட்டிய
கெக்கிராவ

# மார்பகப் புற்று

**எம்.சி.எம். ஷகீல் (அட்டாளைச்சேனை),**
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
உசாத்துணை:John F.Knight, 1986,Family medial care

---

*சென்ற இதழின் தொடர்ச்சி.....*

**புற்று நோய் தொடர்பான புள்ளிவிபரம்.**

- உலகலாவிய ரீதியில் குறைந்தது 2 50,000 பெண்களில் வருடாந்தம் மார்புப் புற்றுநோய் காரணமாக இறக்கின்றனர்.
- 25 பெண்களில் ஒருவர் மார்புப் புற்று நோயினால் இறப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.
- மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மார்புப் புற்று நோயினால் அதிகளவில் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். எனினும் ஜப்பான் மற்றும் ஆசியாவில் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இந்நோயானது 40- 50 வயதிற்குட்பட்ட பெண்களையே அதிகளவு பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மார்புப் புற்று பல்வேறுபட்ட காரணிகளால் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பரம்பரை ரீதியில் புற்று நோய் காணப்படுமிடத்து ஒரு பெண் மார்பு புற்று நோயினால் பாதிப்புக்குள்ளாவதற்குரிய சாத்தியம் ஏனைய பெண்களில் மார்புப் புற்று ஏற்படுவதற்கான காலத்துடன் இவர்களில் மார்புப் புற்று மிகவும் ஆரம்ப வயதுகளில் ஏற்படுகிறது.

ஒரு பெண்ணின் திருமண நிலை (Marital state), அவள் பெற்றுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை, மற்றும் தாய்ப்பாலூட்டும் வழக்கம் என்பன மார்புப் புற்று நோயில் செல்வாக்குச் செலுத்துகிறதா என்பதில் இன்னும் நிச்சயமற்ற தன்மை நிலவி வருகிறது. எனினும் தாய்ப்பாலூட்டும் (breast feeding) பழக்கம் இந்நோயின் ஆபத்தை குறைக்கிறது என பல ஆய்வுகள் கூறுகின்றன.

மார்புப் புற்று நோய் பற்றி மக்கள் மத்தியில் சில தவறான அபிப்ராயங்கள் நிலவி வருகின்றன. மார்பகங்களில் ஏற்படுகின்ற வெளிக்காயங்கள் (local injury),வீக்கம், புண், புற்று வகையைச் சேராத கட்டிகள்(non- cancerous fumours) என்பன மார்புப் புற்று நோயை ஏற்படுத்துகின்றன என மக்கள் நம்புகின்றனர். ஆனால் இவை முற்றிலும் தப்பான அபிப்பிராயங்களாகும்.

கருத்தடை மாத்திரைகளின் பாவனை புற்று நோயை ஏற்படுத்துவதாக பல ஆய்வுகளின் முடிவுகள் கூறுகின்றன. ஏலவே கூறியது போல் மார்பு புற்று நோயை ஆரம்ப நிலைகளில் கண்டுபிடித்து உடனடி சத்திர சிகிச்சை அளிப்பதன் மூலம் இந்நோயை குணப்படுத்த முடியும். இதற்காக 30 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் ஒவ்வொரு மாத விலக்கின் பின்னரும் ஒழுங்கு முறையாக தனது மார்பகங்களை தற்பரிசோதனை (**self- examination**) செய்ய வேண்டும் என ஓர் அமெரிக்க மருத்துவ குழு தெரிவித்துள்ளது. இது சுய தொட்டுணர்வு பரிசோதனை (**self-palpitation**) எனப்படும் இப்பரிசோதனை மூலம் ஒரு பெண் தனக்கு புற்று நோய் உள்ளதா என ஆரம்ப நிலைகளிலே இலகுவாக பரிசோதித்தறிய முடியும்.


இப்பரிசோதனையின் வெற்றியானது இப்பரிசோதனையின் தொடர்ச்சியான தன்மை மற்றும் பரிசோதனையின் பூரணத்தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது. எனினும் இதை உறுதி செய்ய தற்போது குறிப்பாக இரண்டு நவீன பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஒன்று மமோகிராபி (**mammography**) எனப்படுகிறது. மற்றையது தேர்மோகிரபி (**Thermography**) எனப்படும்.


மமோகிராபி முறையில் மார்பகங்கள் விஷேட X கதிர்களின் ஊடுருவலுக்கு உள்ளாக்கப்பட்டு மார்பகங்களின் உட்கட்டமைப்புகளின் தெளிவான வரைபடம் பெறப்படுகிறது. மமோபிராபி ஆனது சாதாரண கறுப்பு வெள்ளை படவரைவாகப் பெறப்படுகிறது. தற்போது முன்னேற்றமடைந்த 'செரோகிராம்' (**Xero- gram**) எனப்படும் நீல வெள்ளைப் படங்களாக மமோகிராபி பெறப்படுகிறது.

புற்று நோய்க்கலங்களின் வெப்ப நிலையானது அதனைச் சூழவுள்ள சாதாரண கலங்களின் வெப்பநிலையை விட உயர்வனது எனும் உண்மையை பயன்படுத்தி தேர்மோகிராபி படவரைவு பெறப்படுகிறது.

மார்பு புற்று நோய் ஏற்படும் வீதம் அது மார்பகத்தில் ஏற்படும் இடத்தைப் பொறுத்து வேறுபடும்.

- மேல் வெளிக்கால் பகுதி - 45%
- கீழ் வெளிக்கால் பகுதி 10%
- மேல் உட்கால் பகுதி - 15%
- கீழ் உட்கால் பகுதி - 5%
- நடுப்பகுதி (முலைப்பகுதி காம்புப்பகுதி) 25%





மார்புப் புற்றின் மிகச் சிக்கலான நிலமை யாதெனில் இப்புற்று நோயானது மிகவும் வேகமாகப் பரவலடைகிறது. இந்நோயானது கண்டு பிடிக்கப்படமுன்னரே மார்பகங்களில் இருந்து வரை பரவி விடுகிறது. புற்றுக்கலங்கள் நிணநீர்த் தொகுதியூடாகவும் மற்றும் குருதியினூடாகவும் பரம்பலடைகிறது. இதன் காரணமாக இந்நோய் விரைவாக உடலின் பல்வேறு உறுப்புகளுக்கு பரவுகிறது. இவ்வாறு பரவலடையும் புற்று நோய்க்கலங்கள் மெடாஸ்டேஸால் (metastases) எனப்படும் புற்று நோய்க்கல அமைப்பை ஏற்படுத்துவதனால் X கதிர்களின் உதவியுடன் இவை இடுப்பெண்பு, மண்டையோடு, விலாஎன்பு, தொடைஎன்பு மற்றும் ஏனைய நீண்ட என்புகள் கை என்புகள் என்பவற்றில் காண முடியும். புற்று நோய் நுரையீரல் மற்றும், ஈரல் போன்ற உறுப்புகளுக்கும் பரவுவது பொதுவானது.

**இந்நோயின் அறிகுறிகள்.**

அனேகமான நோயாளிகளில் (கிட்டத்தட்ட 80%) மார்புப் புற்றின் முதலாவது அறிகுறியாக நோவற்ற கட்டிகள் (painless lump) தோன்றுகின்றன. இதைவிட சில குறைந்த அளவிலான அறிகுறிகளையும் காணக்கூடியதாகவும் இருக்கிறது. அந்த வகையில் மார்பகங்களின் அசௌகரிய நிலை மற்றும் முலைக் காம்பு அறிகுறிகள் (nipple symptoms) என்பவற்றைக் குறிப்பிடலாம். முலைக்காம்பு அறிகுறிகளாக முலைக்காம்பு அரிப்பு, சிரங்கு, செந்நிறமாதல், முலைக்காம்பு உள்நோக்கி அமிழ்ந்து காணப்படல், அல்லது முலைக்காம்பு வெளியேற்றம் என்பவற்றைக் குறிப்பிடலாம். மார்பகங்களும் சில அறிகுறிகளை வெளிக்காட்டுகின்றன. செந்நிற அடையாளங்கள், பொதுமைப்பாடான வன்மையான தன்மை, மார்பகங்களின் பருத்த நிலை அல்லது சுருக்கமடைந்த நிலை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மார்புப் புற்று நோயின் மற்றுமொரு அறிகுறியாக சில வேளைகளில் இரு மார்பகங்களும் பக்கவாட்டில் பரிசோதிக்கும் போது சமச்சீரற்றதாய் அமையலாம். மார்புப் புற்று விருத்தியடைந்த அல்லது முற்றிய நிலையில் அறிகுறிகள் மிகத் தெளிவாகத் தென்படும். மார்பகங்கள் செந்நிறமானவையாகவும், புண்கள் ஏற்பட்டும் காணப்படுவதுடன் மார்பு வீக்கமடைந்து அல்லது சுருங்கிக் காணப்படும். மார்பகங்களில் வலி ஏற்படும். இந்நோய் சம்பந்தமான அதீத அச்ச நிலையும் தனக்கு என்ற மனோநிலையுமே இந்நோயானது விபரீத நிலைகளுக்கு செல்வதற்கு ஏதுவாக அமையும் பிரதான காரணிகளாகும்.

**மார்புப் புற்றுக்கான சிகிச்சைகள்.**

ஆரம்பத்தில் "ஊசி டையொப்சி" (needle biopsy) எனப்படும். நோயைக்கண்டுபிடிப்பதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதன் போது ஊசி ஒன்று ஏற்றப்பட்டு மார்பகத்தின் சில கலங்கள் பெறப்படும். இவற்றில் புற்று நோய்க் கலங்கள் உள்ளதா என்பது உறுதி செய்யப்படும். புற்று நோய் காணப்படும் இடத்து மார்பகம் அதனைச் சூழவுள்ள இழையங்கள் கவ்கட்டுச் சுரப்பிகள், போன்றவற்றுடன் மிககக் கவனமாக சத்திர சிகிச்சை மூலம் வெட்டி அகற்றப்படும்.

அவைச் சிகிச்சையைத் தொடர்ந்து பல்வேறு வகைப்பட்ட சிகிச்சைகள், (therapy) அளிக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக கதிர் வீச்சுச் சிகிச்சைகள், (radiation therapy) பிரசித்தி பெற்றிருந்தது. எனினும் இது சத்திர சிகிச்சையின் பின் உயிர்ப்பிழைக்கும் அளவை குறைப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன. தற்போது புற்று எதிர் இரசாயன சிகிச்சைகள் (anti cancer chemotherapy) பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் Lpam, cyclophosphamide,methotrexate,fluoroura உடை போன்ற பல்வேறு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

மார்புப் புற்று நோய் சத்திர சிகிச்சையில் சத்திர சிகிச்சை நிபுணர்களின் உண்மையியல் மனிதாபிமான முறையிலான சேவையைப் புரிகின்றனர் என்றே கூற வேண்டும். ஏனெனில் அவர்கள் தங்களின் நேரம் மற்றும் ஏனைய அன்றாடத் தேவைகளையும் பொருட்படுத்தாமல் நீண்ட நேரத்திற்குத் தொடரும் இச்சத்திர சிகிச்சையை மேற்கொள்கின்றனர்.

ஐக்கிய இராஜ்ஜியத்தின் பேர் மிங் எனும் நகரில் உள்ள ஒரு பாரிய வைத்தியசாலையில் மார்புப் புற்று அறுவைச் சத்திர சிகிச்சையின் பின்னர், செயற்கையான மார்பகங்கள் பொருத்தப்படுகின்றன. மேலும் இவர்களுக்கு உளவியல் சிகிச்சை முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் ஒன்றாக ஆலோசனை வழங்கல் (counseling) குறிப்பிடலாம். இவ்வாறான சிகிச்சை முறைகளினால் மார்புப் புற்று சத்திர சிகிச்சைக்குள்ளாகும் பெண்களின் மனோநிலை பாதிப்படைவதையும் தடுக்க முடியும்.

ஆரம்ப நிலைகளில் இந்நோயை கண்டு பிடிப்பதன் மூலம் இந்நோய்க்கான சிகிச்சைகளைப் பெற்று இக்கொடிய ஆட்கொல்லி நோயில் இருந்து பல்லாயிரக்கணக்கான அப்பாவிகள் உயிர் பிழைப்பதை உறுதி செய்ய முடியும். இதற்காக தொடர்ச்சியான பரிசோதனை இன்றியமைாததாகும்.

**உமது மார்பகங்களை**
**தற்பரிசோதனை செய்யும் முறை**

1. குளிக்கும் போது
   குளிக்கும் போது உங்களுடைய இரு மார்பகங்களையும் பரிசோதிக்க முடியும். ஏனெனில் ஈரமான தோலின் மேலாக கை இலகுவாக வழுக்கி அசைவதால் விரல்களைத் தட்டையாக வைத்துக் கொண்டு மார்பகங்களைத் தடவி ஏதேனும் வழமைக்கு மாற்றமான கட்டிகள், கனுக்கள், மற்றும் தடிப்படைந்த பாகங்கள், உள்ளதா என்பதை உணர்ந்தறிதல்.
2. கண்ணாடின் முன் (before a mirror)
   கைகளை பக்கங்களுக்கு விட்டு உமது மார்பகங்களை கண்ணாடியில் அவதானிக்க. பின் இரு கைகளையும் தலைக்கு மேலால் உயர்த்தி மார்பகங்களின் நிலையை அவதானிக்குக.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது மர்பகங்களில் ஏதேனும் வீக்கங்கள், மார்பகத் தோலில் குழிவிழுதல், மற்றும் முலைக்காமபுகளில் (nipple) ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுகின்றனவா என்பதை அவதானிக்க. பின் கைகளை இடுப்பில் வைத்து கீழ் நோக்கி அழுத்துக. இதன் போது மார்பகங்கள் இரண்டும் ஒன்றையொன்று பொருந்தாதிருக்கும். எனினும் சில பெண்களில் இவை பொருந்திக் காணப்படும். தொடர்ச்சியாக இவ்வாறு மார்பகங்களை கண்ணாடியில் நோக்கும் போது மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண நிலைகளை அல்லது மாற்றங்களை அவதானிக்க முடியும்.

3. தரையில் படுத்தவாறு (lying down)

உமது வலது மார்பகங்களை பரிசோதிக்க தரையில் படுத்துக் கொண்டு உமது வலது தோளின் கீழ் தலையணை அல்லது மடித்து கிடைப்பான் (towel) ஒன்றை வைக்க. பின் உமது வலது கையை மடித்து தலையின் கீழ் வைக்க. இது மார்பு இழையங்களின் நெஞ்சில் சீராகப் பரம்பலடைய உதவுகிறது.

பின் இடது கை விரல்களை தட்டையாக வைத்துக் கொண்டு வலது மார்பகத்தை மெதுவாக அழுத்தி கையை மெதுவாக வட்ட வடிவில் அசைக்க இவ்வாறு அசைப்பது மணிக்கூட்டு கம்பி அசைவின் திசையில் அமைய வேண்டும். கையின் அசைவை மார்பகத்தின் மேல் பகுதியின் வெளிப்பகுதியில் இருந்து (12 மணியைக் குறிக்கும் புள்ளி) ஆரம்பிக்க வேண்டும்.

இரு மார்பகங்களின் கீழ் பகுதியின் வளைந்த எல்லைகளில் போன்ற கடின இழையம் காணப்படுவது சாதாரணமானது. பின் ஓர் அங்குலம் முலைக்காம்பை நோக்கிய திசையில் கையை அசைத்து வட்ட வடிவில் அசைக்க. இவ்வாறு மார்பகத்தின் அனைத்துப் பகுதிகளையும் (முலைக்காம்பு உட்பட) பரிசோதித்தறிக. இவ்வாறே இடது மார்பகத்தையும் பரிசோதிக்க. இவ்வாறான பரிசோதனை மூலம் உமது மார்பகங்களின் அமைப்பை உணர்ந்தறிக. மார்பகத்தின் அமைப்பை ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் தெரிவித்து சிகிச்சைகளை பெற்றுக் கொள்க. இறுதியாக முலைக்காம்புகளை பெருவிரல் சுட்டுவிரல்களுக்கிடையில் வைத்து மெதுவாக நசுக்கி அவதானிக்க. ஏதேனும் தெளிவான குருதியுடனான திரவத்தன்மையான வெளியேற்றம் அவதானிக்கப்படின் உடனடியாக வைத்தியரை நாடுக.


✡✡✡

# அன்பின் வடிவம்
# அன்னை

தாயே!
ஈரைந்து மாதமாய் எனைச் சுமக்க
நீ கண்ட கசப்பான
அநுபவங்கள்......

உன் முன்னே மலர்ந்த
என் விழிகளைக் கண்டு
உதிர்ந்த உன் ஆனந்தக் கண்ணீர்
இன்னும்
உதிரத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது.

உதிரத்தின் உவமையை
ஒப்புவித்து
சோதனையையும்
சாதனையாக்கும்
சாணக்கிய தாயே...
அன்புச் சிகரமாய்
நம் கண் முன் நிற்கிறாயே.....



கண்ணீராகிப்போன
காலத்தின் சுவடுக்குப் பின்
இறுதி மூச்சு வரை என் மேல்
குவித்து வைத்துள்ள
நேசத்தை
மீண்டும் மீண்டும்
நிறுவிவிடு தாயே

நினைக்கையில்
ஆனந்தம் ஊற்றெடுத்து
மெய்யெங்கும் பரவிச்செல்ல-

இத்துணை மகிழ்ச்சி
ஆயுள் முழுதும்
நீடிக்க-
இறைவா,
அருள் புரிய வேண்டும்.

எல்.எப்.பஹ்மிதா
கஹடகஸ்திகிலிய

1980களின் பிற்பாடு அநுராதபுர மாவட்டத்தில் எழுத்துலகில் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட ஒரேயொரு பெண் எழுத்தாளர் என்றால் அது கெக்கிராவ ஸஹானாதான் என்று மகிழ்ச்சியுடன் கூற முடியும். "ஒரு தேவதைக் கனவு" என்ற சிறு கதைத் தொகுப்பில் தன்னை வெளி உலகுக்கு அடையாளப்படுத்தி மீண்டும் "இன்றைய வண்ணத்துப் பூச்சிகள்" என்ற கவிதைத் தொகுதி மூலம் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். ஆரம்பத்தில் வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் உருவெடுத்துள்ளன. இப்பொழுது தொகுதிகளின் ஊடாக இவரது எழுத்துலகப் பயணம் தொடர்கிறது.

இயற்கையில் பெண்கள் சுமை கூடியவர்கள், அதிலும் குடும்பப் பெண்களின் சுமை இன்னும் அதிகமானது. பொறுப்புக்கள் எல்லாம் இவர்கள் தலையில் நிறைந்திருக்கும். எங்கும் அசைய முடியா அவல நிலை. இதற்கு ஸஹானா மாத்திரம் விதிவிலக்கல்ல. அப்படியிருந்தும் பல கஸ்டங்களை எதிர்க் கொண்டு இக்கவிதைத் தொகுப்பு பிறந்திருக்கிறது என்றால், இம் முயற்சியை பாராட்டாமல் இருக்க முடியாது.

இக்கவிதைத் தொகுப்பானது எமது மாவட்டத்தில் எழுத முயலும் அத்தனை இளம் எழுத்தாளர்களின் உள்ளங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதோடு எழுதத் தெரிந்தும் நல்ல படைப்புகளைப் படைக்கத் தெரிந்தும் தன் சிந்தனைத் துளிகளை விசிறாமல் மண்டைக்குள் நிரப்பி வைத்துக் கொண்டு இருக்கின்ற பெண்களுக்கு தூண்டுதலாகும். என்று கருதுகிறேன்.

உண்மையில் சில பெண்கள் தாமாகவே தம்மை தாழ்த்திக் கொள்கின்றனர். தம்முடைய ஆற்றல்களையும் அவாக்களையும் வெளி உலகுக்கும் படம் போட்டுக் காட்டுவதில் முயற்சி இல்லாமல் இருக்கின்றனர். பெண்ணாகப் பிறந்த நமக்கு இதெல்லாம் தேவைதானா என்று ஒதுங்கிக் கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இந்நூல் நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்துள்ளது.

இக்கவிதைத் தொகுப்பு 2005.07.24 இல் அநுராதபுரத்தில் இளம் தலைமுறையின் முயற்சியில் இயங்கி வருகின்ற அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்றத்தின் (படிகள்) ஊடாக மேமன் கவியின் தலைமையில் வெளியிடப்பட்டது. நூல் அறிமுகத்தை நாச்சியாதீவு பர்வீன் வழங்க, நூல் ஆய்வை புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவரான அன்பு ஜவஹர்ஷா அவர்களால் மிக ஆழமாகவும் சுவையாகவும் அலசி ஆராயப்பட்டது.

இத்தொகுப்பின் மகுடத்தைப் போலவே உள்ளே உருவெடுத்திருக்கின்ற கவிதைகள் அழகாகவே உள்ளன. சில வரிகள் சிந்திக்கவும், சில வரிகள் மகிழ்வுறவும், இன்னும் சில வரிகள் கவலைப்படவும் மேலும் சில வரிகள் ஆச்சரியப்படவும் செய்கின்றன. இவர் தனக்கென ஒரு பாணியில் சொல்லாடல்களைதொகுத்திருக்கிறார்

## இன்றைய
## வண்ணத்துப் பூச்சிகள்

### *சில குறிப்புகள்*

-அநுராதபுரம் றஹ்மத்துல்லாஹ்-

கவித்துவம் நிறைந்த விழிகளுக்கு ஒரு கவிதையாகியே தெரியும். மரத்தின் அழகும் நன்மைகளும், மூட நம்பிக்கைகள், யதார்த்தம், மாமியாரின் அடக்குமுறை என்று விசாரித்து செல்கிறது.

அதுபோலவே வாழ்க்கைச் சூழல் என்ற கவிதைக்குள் கனதியான ஒரு வரியைக் காண்கின்றேன்.

விரிந்த பூவில்
நுழைந்த தேனீ
திரும்பிப் பறக்கின்றதா?

மனதினுள் நுழைந்த மகிழ்ச்சியை கொடுத்த ஆண்மகன் சொல்லாமலே விலகிச் செல்வதை சித்தரிக்கிறது. கவிதைகள் ஆழமாக நோக்கப்படும் போதே அதன் உட்செறிவு நன்கு புலப்படும். மேலும் பல திசைகளை நோக்கிப் பாய்கிறது ஸஹானாவின் கவி நதிகள். ஆகாயம், பூமி, காதல், திருமணம், வாழ்க்கை, நட்பு, சீதனம், கருணை, யதார்த்தம், அறிவுரை, இரங்கல் என்று வியாபித்து விரிகின்றன. ஒவ்வொரு கவிதையையும் வரி வரியாய் விமர்சிக்க முடியும். ஆனால் இது ஒரு சிற்றிதழ் என்பதால் சில விடயங்களை சுருக்கமாகவே எடுத்துக் கூற வேண்டியுள்ளது. எனவே இலக்கிய ஆர்வலர்கள் அதிலும் இளம் படைப்பாளிகள் இவ்வாறான கவிதைத் தொகுப்புகளை வாசிக்கும் படி வேண்டிக் கொள்கிறேன்.

இக்கவிதைத் தொகுப்புக்கு வாழ்த்துரை வழங்கியவர் கவிப்பேரரசு பத்மஸ்ரீ வைரமுத்து அவர்கள். அவர் சுவைமிக்க கவிதைகளை இயற்றுபவர் என்பது யாவரும் தெரிந்ததே. அப்படிப்பட்ட கவிஞர் வாழ்த்துரை வழங்கியமை இத்தொகுப்புக்கு மேலும் வலுவூட்டுகிறது. கவிப் பேரரசைக் கூட வேப்ப மரம் தன் பக்கம் சாய்த்துள்ளது. வாழ்த்துரையை கவி வரிகளாலே கூறியுள்ளார்.

அத்துடன் மேமன் கவி அவர்கள் ஸஹானாவின் கவிதைகளும், அவரது சுயமும் என்று தன் பொன்வார்த்தைகளைப் பொழிந்துள்ளார். அதில் கவிதைகள் பற்றி அவரது சிந்தனைகள் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். இறுக்கமான, அழகான மொழி நடையில் விபரித்துள்ளார். மேமன் கவியைத் தெரியாத இலக்கியவாதிகள் இல்லை எனலாம். கவியரங்குகளில் கவிதைகளை தூள் கிளப்புகிறவர். பல தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். தன் சொந்த மொழியில் அல்லாமல் பிற மொழியில் கவிதை எழுதுபவர். அப்படிப்பட்ட கவிஞர் ஸஹானாவின் சுயம் பற்றி எழுதியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

மேலும் ஸஹானா அவர்களின் முயற்சி விரிவடைந்து இன்னும் பல தொகுதிகளை பிரசவிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு அநுராதபுர மாவட்டத்தில் மேலும் பல படைப்பாளிகள் உருவெடுக்க வேண்டும் என்பதும் எனது அவாவாகும். பலர் இப்பொழுது எழுதிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக நாச்சியாதீவு பர்வீன், எம்.சீ.றஸ்மின் அநுராதபுரம் றஹ்மத்துல்லாஹ், அநுராதபுரம் டில்சான், எல்.வஸீம் அக்ரம், அநுராதபுரம் ஏ.எஸ்.ஷர்மிலா பேகம், கலாவெவ நபீஸ்தீன், கெக்கிராவ சுலைஹா, பாத்திமா சப்ரினா, ஜன்சி கபூர் ஏ.பீ.எம். அன்சார் இக்கிரிகொல்லாவ லரீபா அபூபக்கர், பாத்திமா பேகம், எம்.சி.நஜுமுதீன், அநுராதபுரம் *ஸமான்* மற்றும் இன்னும் பல எழுத்தாளர்கள் இலக்கிய தாகத்துடன் அலைகின்றனர். இவர்களது இலக்கியப்

படிகள்
படைப்புகளுக்கு பல ஊடகங்கள் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. இதற்குப்பின்னால் நின்று ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கிவருபவர் மூத்த இலக்கிய வாதி ஒருவர் அன்பு ஜவஹர்ஷா ஆவார்

இத்தொகுப்பின் இறுதி அட்டையில் ஒரு இறுக்கமான கவி வரி வியக்க வைக்கிறது. கவிப் பேரரசு வைரமுத்து தத்துவக் கவிஞர் இ.பத்றுதீன், அவர்களும் தம் வார்த்தைச் சங்கொலிகளில் மூழ்கியுள்ளார்கள். அதாவது கூண்டில் தான் இருக்கிறேன் என் சிறகுகள் வானத்தில், பெண்ணானவள் ஒரு வட்டத்துள் இருந்தாலும் தன் கற்பனைகள் வியாபித்து ஆகாயம் வரை விரிந்து செல்வதை கூறுகிறது. இதனால் தான் தத்துவக் கவிஞர் இ.பதுறுதீன் அவர்கள் ,

ஸஹானா பிறிந்த
கவிதைச் சாறு
கரும்பல்ல- இரும்பு.


என்று அழகு மொழியில் விபரிக்கின்றார். இத்தொகுப்பு பற்றி இவரும் மொழி பகர்ந்திருப்பது சாதாரண எழுத்து வரிகளல்ல. சத்துள்ள சொற் களஞ்சியங்கள். எனவே இத்தெகுப்பு நம்மைத் தொட்டு இழுக்கிறது.

▲


அல்-மதீனா
மாணவர் மன்ற கலை இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்
எப்.ரஸீக் பர்ட்லீ
அல் – மதீனா ம.வி
குடா நெழுபாவை
ஹிதோகம
அநுராதபுரம்.


# தாகம்



காடுகளேயானாலும்
பசுமையில்லையெனில்
பார்க்கவொண்ணாது

நீர் இல்லையெனில்
எல்லாமே நிறம் மாறும்

புல் வெளிறும்
மரங்கள் இலையுதிர்க்கும்
பூவும் பிஞ்சுமில்லாத்
துயரந் துளிர்க்கும்

தாகம் மிகும்
மண்ணுக்கும் மற்றவைக்கும்

தனிக்கத் தண்ணீரில்லையெனில்
உயிர்த்துடிக்கும்
ஆத்மாவுக்கு அவஸ்தையிருக்கும்

வலியமிருகமெனில்
இரத்தம் குடிக்கும்

இந்த மான்கள்தான் பாவம்
அவை
கூடிக்கூடி குசுகுசுப்பதெல்லாம்
கானலைப்பற்றித்தான்

-முல்லா-

(நன்றி-யாத்ரா 11)

**அநுராதபுரி முஸ்லிம்களின் கலை இலக்கிய வரலாறும் அதன் வளர்ச்சியும்**

# இலக்கியத் தடங்கள்-07

ஆய்வு- திருமதி எம்.எஸ்.பாத்திமா ஸப்ரீனா

*சென்ற இதழின்தொடர்ச்சி. . .*

## 18. திருமதி ஏ.எஸ்.ஜஹன்னரா (கெக்கிராவ சஹானா)

இவர் கெக்கிராரவயைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் தனது படைப்புக்களை கெக்கிராவ ஸஹானா என்ற பெயரில் படைத்து வருகிறார். இவர் ஆங்கில ஆசிரியரும் ஆவார். இவர் சிறுவயதுச் சிறுமியாக இருந்த போது மல்லிகை மூலம் இலக்கிய உலகுக்கு இனங்காட்டியவர் மர்ஹூம் ஜனாப் கோயா அப்பாஸ் அவர்களாவார். இவரது முதல் கவிதையும் முதல் சிறுகதையும் மல்லிகையில் பிரசுரமாகி இருந்தது.

இவரது படைப்புக்கள் மல்லிகை உட்பட பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. இவர் வானொலியிலும் வலம் வந்துள்ளார். இவரது "ஒரு தேவதைக் கனவு" மல்லிகைப் பந்தல் வெளியீடு தமிழகத்தில் வெளியிடப்பட்டதாகும். எமது மண்ணில் வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுதி இது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். இத்தொகுதி 2002ல் இஸ்லாமிய இலக்கிய மகாநாட்டில் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இவரது "இன்றைய வணணத்துப் பூச்சிகள்" கவிதைத் தொகுதி அண்மையில் அநுாதபுரத்தில், தமிழக வெளியீடாக வெளிவந்தது. இன்றைய இஸ்லாமிய பெண் படைப்பாளுகளுள் ஸஹானா முக்கிய படைப்பாளியாக மிளிர்கிறார்.

## 19. செல்வி ஜன்ஸி கபூர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் தமது பள்ளிப் பருவத்தில் இலக்கிய ஆர்வம் கொண்டவர். இலக்கியப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றியவர். 1990களில் வட பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த பிறகு இவர் அநுராதபுரியிலேயே வசித்து வருகிறார். அன்றிலிருந்து இன்றுவரை இம்மண்ணிலிருந்து இலக்கியம் படைத்து வருகின்றார். ஹிஜ்ரி 1400 அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்று முன்னாள் ஜனாதிபதி J.R ஜயவர்தனா அவர்களிடம் பரிசு பெற்றவர். இவரது படைப்புகள் (கவிதை, சிறுகதை, கட்டுரை) அநுராகம், தினமுரசு, நவமணி, பிறையொளி, தொலைச்சுடர், தினகரன், படிகள் என்பவற்றில் இடம் பெற்றுள்ளன. அநுராகம் இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார். மேலும் 1997ல் ஆசிரியர் தொலைக்கல்வி பிராந்திய நிலைய வெளியீடான "தொலைச் சுடர்" சஞ்சிகையின் ஆசிரியராக இருந்துள்ளார்.

படிகள்

அ/ஸாஹிரா தேசிய பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியையான இவர், பல சிறுகதைகளை தந்துள்ளார். இவரது ஆக்கங்களில் சமகால நிகழ்வுகள் புரையோடிப் போயிருப்பதைக் காணலாம். பல விஞ்ஞானக்கட்டுரைகளைத் தினகரன் பத்திரிகையில் தந்துள்ளார். வானொலியின் பல நிகழ்ச்சிகளை இவரது ஆக்கங்கள் மெருகூட்டின. அத்துடன் பல விமர்சனக் கட்டுரைகளையும் தந்துள்ளார். 1996ல் சர்வதேச ஆசிரியர் தின இலக்கியப் போட்டியில் சிறுகதை மூலம் பரிசு பெற்று அ-ஸாஹிரா தேசிய பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவராவார். அ-ஸாஹிராவின் வெளியீடான பிறையொளி இதழின் இணையாசிரியராகவும் கடமை புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

20. ஏ.ஆர்.எம்.பர்வீன்

நூற்றுக்கணக்கான முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கிய அநுராதபுரப் பிரதேசத்தில் பிரசித்திப் பெற்ற பல கிராமங்களுள் ஒன்றாக நாச்சியாதுவ விளங்குகின்றது. இக்கிராமத்தின் கண் அமைந்த பிரமண்டமான குளமும் அதனோடு அரவணைக்கப்பட்ட பசுமை போர்த்த வயல்களும் இயற்கைச் செழிப்பும் கொண்ட இம் மண்ணின் மைந்தனாய் பர்வீன் அவர்களைச் சொல்லலாம். இலக்கிய நேசிப்பும் தன்னம்பிக்கையும் தளரா முயற்சியும் கொண்ட இவர் பழகுவதற்கு இனிய தோழர்.

1992ல் மாணவப் பருவத்தில் "லைட் ரீடிங்" மூலம் இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தார். தினகரன்,அமுது, செந்தூரம், இடி,ஜனனி,மித்திரன், யாத்ரா, அல்ஹஸனாத், அநுராகம், படிகள், மல்லிகை வீரகேசரி ஆகிய சஞ்சிகைகளில் வந்துள்ள இவரது ஆக்கங்கள் வாசகரிடத்தே பெரு வரவேற்பை பெற்றுள்ளன. கவிப்பிரியன், பிரவீனா, அபர்ணா, நாச்சியூர்செல்வன், ஆகிய பெயர்களில் தொடர்ந்தும் ஆக்கங்கள் படைக்கின்றார். மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களது 50வது ஜனன தினத்தையொட்டி வெளியிடப்பட்ட "ஓடும் நதியே பாடும் மலர்கள்" எனும் கவித் தொகுப்பில் இவரது கவிதையும் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. "நாச்சியதீபம்" இதழாசிரியராகவும் அநுராதபுரி கலை இலக்கிய வட்டத்தின் அமைப்பாளராகவும் செயற்படுகிறார். இவர் வானொலியிலும் இவரது கலைத்துவ ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் 2002 அக்டோபரில் மர்ஹூம் கவிஞர் எம்.எச்.எம்.ஷம்ஸ் நினைவுக் கவிதைத் தொகுதியை திருமதி பஸ்மினா அன்ஸார் ரிபாக்குடன் இணைந்து தொகுத்து புதுப்புனல் எனும் மகுடத்தில் சிந்தனை வட்டத்தின் 150வது வெளியீடாக வெளியிட்டு தன்னை இலக்கிய உலகில் புலப்படுத்திய கவிஞர் ஷம்ஸிற்கு சமர்ப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலங்களில் இவரது இலக்கிய ஆய்வுகளும் விமர்சனக் கட்டுரைகளும் சமகால நிகழ்வுக் கட்டுரைகளும் படிகள், எங்கள் தேசம், தினகரன், மல்லிகை வீரகேசரி என்பவற்றில் வெளிவருகின்றன. இவரது "சிரட்டையும் மண்ணும்" எனும் கவிதைத் தொகுதி அநுராதபுரம் ப்ரிசும் சமூக அபிவிருத்தி அமைப்பு வெளியீடாக மிக அண்மையில் வெளிவந்துள்ளது. இவர் இன்றைய பொழுதில் அநுராதபுரத்தில் முக்கிய கவிஞராக மிளிர்கிறார்.

(ஆய்வு தொடரும்...)

# பிடிவாதக்காரி

அன்று மாலை. வேலை விட்டு வந்ததும் அவளது தீர்மானத்தை அம்மாவின் காதில் போட்டாள், உஷா. அப்போதுதான் யுத்தம் ஆரம்பித்தது. இதைக் கேட்ட உஷாவின் அம்மா, பாடத் தொடங்கி விட்டாள். "என்னடி சொல்றே எல்லாப் பொண்ணுங்களையும் போல உன் புத்தியும் இப்படி கெட்டுவிட்டதே! இதற்கு ஒருநாளும் நான் சம்மதிக்க மாட்டேன்."

"என்ன அத்தே!....." என்று கேட்ட வண்ணம் உஷாவின் அண்ணி பூர்ணிமா சாலைக்கு வருகிறாள். அவளின் காதிற்கும் இந்த விடயம் செல்கிறது.

"ஆ....!" என்று வாயைப்பிளந்தவளாய் உஷாவைப் பார்த்து பூர்ணிமா, "என்ன விடயம் செய்யப் போறாய்? உன் அண்ணனுக்கு இதெல்லாம் பிடிககாதெண்டு உனக்குத் தெரியாதா?"

அப்போது எரிச்சலுடன் அண்ணியைப் பார்த்து உஷா, "அண்ணி, நீங்க பேசாம இருங்க. ஏன் உங்க தங்கச்சி மட்டும் இதைச் செய்யலியா?" என்றாள். அவ்வளவுதான் பேச்செல்லாம் அடங்கிப் போனது பூர்ணிமாவிற்கு.

அப்போதுதான் சேகர் வீட்டினுள்ளே நுழைகிறான். அமைதியாக நிற்கும் தன் மனைவியையும் எரிச்சலுடன் நிற்கும் அம்மாவையும் பார்த்தவுடன் அவனுக்கு விளங்கி விட்டது உஷா ஏதோ இடியை போட்டுவிட்டாள் என்று.

அம்மாவிடம் விசாரித்த போது தான் அவனுக்கும் அந்த விடயம் தெரிந்தது. கண்டபடி திட்டினான். "என் குடும்ப மானத்தையே வாங்கப் போறாய் இது வரைக்கும் நம்ம குடும்பத்துல இது மாதிரி யாரும் தீர்மானம் எடுத்ததில்ல; இதுக்கு ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்."

அதன் பிறகு உஷாவின் அப்பா வீட்டினுள் நுழைகிறார். எல்லோரும் கூடி இருப்பதைப் பார்த்து என்ன நடந்தது என வினவிய போது உஷா ஓடி வந்து அப்பாவிடம், "அப்பா, என் தீர்மானத்தை நான் மாத்திக்க மாட்டேன் நீங்களாவது சம்மதிங்க அப்பா." ஒரு கணம் திகைத்து நின்ற உஷாவின் அப்பா, "என்னவென்று சொலன்னால் தானே எனக்கும் தெரியும்" என்றார்.

அதற்கு உஷா, "இல்லையப்பா, எனது தலைமுடியை "பொப்" வெட்டணும் என்று ரொம்ப நாளாய் ஆசை. இன்றுதான் அதச் சொன்னேன். அதற்கு யாரும் சம்மதிக்கிறார்கள் இல்லை." என அழுதாள்.

இதைக் கேட்ட அப்பா, சிரித்துக் கொண்டே "அதுக்கென்ன நீ பொப் தாராளமாய் வெட்டிக் கொள் நான் பாத்துக் கொள்றேன், யாரும் ஏதும் சொல்ல மாட்டார்கள் எனக் கூறினார்.

இதைக் கேட்ட உஷாவின் மனது அப்போது தான் நிம்மதியடைந்து "அப்பாடி! ஒரு சின்ன விடயத்திற்கு சம்மதம் வாங்க எவ்வளவு போராட்டம்" என நினைத்துக் கொண்டாள். ●

- ஏ.எப்.பர்வின் -

ஸாஹிரா.ம.வி, அநுராதபுரம்.

**கவிதை நூல் வெளியீட்டு விழா**

கெக்கிராவ ஸஹானாவின் **இன்றைய வண்ணத்துப் பூச்சிகள்** கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா 2005.07.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இவ்விழா பற்றிய குறிப்புகள் வீரகேசரி (2005.07.23-24), மெட்ரோ நியூஸ் (2005.07.22), முஸ்லிம் சேவை (2005.07.23), எங்கள் தேசம் (2005.08.15), சுடர் ஒளி ஆகிய ஊடகங்களில் வெளிவந்தன மேலும் அஸ்மா பானு மல்லிகை (ஆகஸ்ட் 2005) நாச்சியாதீவு பர்வீன் வீரகேசரி (2005.08.13) தினகரன் (2005.08.28) ஆகியோரால் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன.

**கலை, இலக்கிய ஒன்று கூடல்**

அநுராதபுர மாவட்டத்திலும் அண்மைக்காலங்களில் முகிழும் கலை, இலக்கிய முயற்சிகள் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் ஒன்று 2005.08.19ம் திகதி காலை 10.00 மணியளவில் அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் அநுராதபுர கலை இலக்கிய வட்ட உறுப்பினர்கள் உட்பட அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**அதிபர் ஏ.சி.எம். ஜவஹர்ஷா அவர்களின் பிரியாவிடை விழா**

அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்தின் முன்னால் அதிபர் ஏ.சி.எம். ஜவஹர்ஷா அவர்களது பிரியாவிடை வைபவம் 2005.08.28ம் திகதி 4.30 மணிக்கு ஸாஹிரா மகா வித்தியாலயத்தின் அதிபர் என்.எஸ்.முக்தார் அவர்களின் தலைமையில் பழைய மாணவர் சங்கம், பெற்றார் ஆசிரியர் சங்கம் என்பவற்றின் அனுசரணையில் நடைபெற்றது.

இவ்விழாவில் ஆசிரியர்கள் மாணவர்கள் அதிபர்கள் சகோதர மொழிப் பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களாக கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் பிறையொளி 37 (அன்பு ஜவஹர்ஷா பிரிவுபசார மலர்) வெளியீடும் இடம் பெற்றது. அல்ஹாஜ் எம்.எச்.ஹுசைன் அவர்கள் சந்தன மாலை அணிவித்தும், முன்னாள் அதிபர் ஐ.ஐனுல் ஹக் பொன்னாடை போர்த்தியும் விழா நாயகன் அன்பு ஜவஹர்ஷா அவர்களை கௌரவித்தனர். அத்துடன் இரு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டமொன்றையும் அன்பு ஜவஹர்ஷா ஆரம்பித்து வைத்தார். இது அனைவருக்கும் முன்னுதாரண மாக திகழ்ந்தது.

*Our Reporter*
**எமது நிருபர்**

**சூழல் பாதுகாப்பு அமைப்பு**

அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்தின் தரம் 10-11 மாணவர்கள் ஒன்றி - ணைந்து ஆரம்பித்துள்ள மேற்படி அமைப்பின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் ஆசிரியர்கள் மாணவர்கள் அதிபர் ஆகியோரின் பங்கேற்பில் நிகழ்ந்தது.

- மரீனா ஹமீட்
கட்டுகஸ்தொட்டை

## எண்ணங்கள்

### எழுதிக்கொள்வது

- டி.ஆர்.விக்டர்
பிடமருவ, பதுளை.

படிகள் பார்த்து பரவசமடைந்தேன். பாதுகாக்கவும் பராமரிக்கவும் தூண்டியது. பல்லாண்டு காலம் உறவுப்பாலம் அமைத்துச் சென்றிட இறைவன் அருள் கிட்டட்டும்.

ஆசிரியர் பார்வையுடன், விடியல் வராதா, இல்லற வாழ்வு, சிதைவுறும் ஒற்றுமை, விடுகதை,உய(ண)ர்வதற்காகவே எல்லாம் என்னை ஈர்த்திருந்தன. இரமெதியமவுடனான பார்வை வாசகனின் வாக்குமூலம், சஹிட் அப்ரிடி சாதனைகள் என்பனவும் தனித்துவமக மிளிர்ந்தன. மார்பகப் புற்றுநோய், இலக்கியத்தடம் ஆகியவை மறு இதழிலும் வர எதிர்ப்பார்க்கிறேன். திரு.ஜீவாவின் அநுபவங்களின் மொழிமாற்றமும் அருமை.

- ஏ.எம். றினாஸ்.
அநுராதபுரம்.

படிகள் இதழ்களை தொடர்ந்து படித்து வருகிறேன். இதழ் 07 அட்டைப்படமும் தலையங்கமும் அருமை. முற்றிலும் வேறுபட்ட அநுகுமுறை. இராசரட்டையின் முதல் ஆசிரியை அன்னை சல்மா நாச்சியுடனான அநுபவங்களை மேலும் பகிர்ந்திருக்கலாம். கட்டுரைகளும் கவிதைகளும் சிறுகதையும் என்னை மகிழ்வித்தன. படிகள் ஆசிரியருக்கும் இதர நண்பர்களுக்கும் (அர்ப்பணிப்புக்கு) தனிப்பட்ட வாழ்த்துக்கள்.

- எம்.என்.மொஹமட் பௌசான்.
ஹொரவப்பத்தனை.

படிகள் இதழ்களில் புதிய மாற்றங் களும் வளர்ச்சியும் தெரிகிறது. குறிப்பாக ஆக்கங்களின் கனதி அதிகரிக்கப் பட்டுவருவதுடன் அட்டைப்பட வளர்ச்சியும் அவதானிக்கத்தக்கது. இதழின் காத்திரத்தை மேலும் அதிகரிக்க முயற்சிப்பதுடன் விரைவாகவும் வெளியிடவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

படிகள் 6,7 இதழ்களை வாசித்தேன். நன்றாக இருந்தது. அதேவேளை குறைகளும் இருந்தன. குறிப்பாக படிகள் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை, ஹைக்கூ, துணுக்குகள், எல்லாம் ஓரளவு காத்திரமாக இருக்கின்றன. இன்னும் இவ்விதழை மெருகூட்டலாம்.

படிகள் இருமாத இதழாக இருப்பதால், இதில் வரும் ஒவ்வொரு பகுதியையும் வித்தியாசமாகவும் பல புதிய தகவல்களைக் கொண்டதாகவும் காணப்பட வேண்டும். அத்துடன் கவிதைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இதழின் பல்சுவைக்கேற்ப, இலக்கியம்,மருத்துவம், அரசியல், பொருளாதாரம், வரலாறு என பல்கோண ஆக்கங்களை சேர்த்து இன்னும் வித்தியாசமாகத் தரலாம்.

இவ்விமர்சனங்களை விட, எனக்கு பெரிய சந்தோசம் என்னவெனில் இந்த இதழின் தடங்கலற்ற வெளியீடு பற்றியதாகும். ஒரு சிறு துண்டுப் பிரசுரம் வெளியிடுவதே பாரிய சிரமமாக இருக்கும் வேலைப் பளுக்களுக்கு மத்தியில் தொடர்ந்து 07 படிகள் வரை (அநுராதபுரம்) வெளியிடுவது பாரிய அர்ப்பணிப்பாகும். தொடர்தும் படிகள் சிறந்த இதழாக வெளிவர என் மனப்பூர்வமானவாழ்த்துக்கள்

*The best wishers*



Lemainatiing, Photo Copy, Duplor

&

Fashionable Furniture

CHARLS GROUP

245,Bank Site,
Anuradhapura
Tel .025.2222763

EDESIGNER

REG. NCPNEP2068

அரச அனுமதி பெற்ற
கணினிப்பயிற்சி நிலையம்



இலக்கை
நோக்கிய வீச்சு

INFO SYS
COMPUTER SYSTEMS





87/24,
Dharmapala Mawatha,
Anuradhapura
Tel: 071-4837524



email: edesigner@dr.com

JUST CLICK to open your future

PUBLISHER OF PADIHAL: ANURADHAPURA STAR WELFARE ASSOCIATION